
திருவாவடுதுறை யாதீன வெளியீடு—26.



உ
சிவமயம்.

திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம்.





சீனிப்புலவர்.

விரோதி—ஆண்டு.

1949.

திருவாவடுதுறை யாதீன வெளியீடு—உகூ.

உ

சிவமயம்

சீனிப்புலவர் இயற்றிய

திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம்.

இஃது

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து

20-வது குருமகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி

ஷை ஆதீன வித்துவான்

த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால்

பரிசோதித்து

நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

பதிப்பிக்கப்பெற்றது.


1949.

முதற்பதிப்பு — 1949.



கும்பகோணம்

ஸ்ரீ வெங்கடேசுவர் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



சிவமயம்.

முகவுரை.

திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம் என்பது திருச்சிற்றம்பல தேசிகரது கலம்பகம் எனப் பொருள் விரித்துக் கொள்ளப்படும்: ஆறாம் வேற்றுமைத் தொகை. இனி, திருச்சிற்றம்பல தேசிகரைப்பற்றிய கலம்பகம் எனப் பொருள் விரித்துக்கொண்டு இரண்டாம் வேற்றுமை யுருபும் பொருளும் உடன் தொக்க தொகையாகவும் கொள்ளலாம். திருச்சிற்றம்பல தேசிகர், திருக்கயிலாய பரம்பரைத் திருநந்திமரபு மெய்கண்ட சந்தானத்து வழிவழி வந்த திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகளுக்குப் பின் பன்னிரண்டாவது குருமஹா சந்நிதானமாக எழுந்தருளியிருந்தவர்கள். இத் தேசிக மூர்த்திகள் எப்பொழுதும் சிவாகம ஆராய்ச்சியையே தமக்குப் பொழுதுபோக்காகக் கொண்டவர்கள். சிவஞானமும் தவவொழுக்கமும் மிக்கவர்கள், இவர்கள் சிவாகமத்திலே இரண்டுலக்ஷம் கிரந்தம் ஆராய்ந்து அறிந்தவர்கள். இக் கலம்பகம் துறைசைக் கலம்பகம் எனவும் வழங்கப்படும். துறைசை என்பது திருவாவடுதுறை யென்னும் பெயரின் மரூஉ. இதில் காப்பு உள்பட 102—செய்யுட்கள் உள்ளன.

கலம்பகமாவது தமிழ் மொழிக்கு உரியனவாகக் கூறப்படும் தொண்ணூற்றாறு வகைப்பிரபந்தங்களுள் ஒன்று. இதன் இலக்கணம் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கண விளக்கப் பாட்டியல் முதலியவற்றால் விளங்கக் காணலாம்.

இனி, "ஒருபோகும், வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் முதற்கவியுறுப்பாக முதலிற் கூறி — புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இப் பதினெட்டுறுப்புக்களும் இயையுமாறு—மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, கலிநிலைத்துறை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, ஆசிரியத்துறை, வெண்டுறை முதலியவற்றால் இடையிடையே வெண்பாவும், கலித்துறையும் விரவிவர மடக்குடைச் செய்யுளும், வண்ணம், சந்தம் முதலியனவும் பொருந்த அந்தாதித் தொடையால் முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடுங்கால் நூறும், தொண்ணூற்றைந்தும், தொண்ணூறும், எழுபதும், ஐம்பதும், முப்பதுமாகப் பாடுவதொரு பிரபந்தம்" இது.

இதனை இயற்றித் திருச்சிற்றம்பல தேசிகர் திருவடிகட்கு அணிகலமாக அணிந்தவர் சீனிப்புலவர் என்னும் புலவர் பெருமான். இவர் பரம்பரையிலேயே சிறந்த புலவர் குலத்திலே தோன்றியவர். திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகளிடத்திலே சிவஞானோபதேசமும், நிருவாண தீக்ஷையும் பெற்றுச்சிவபூசையை விதிவழாமல் செய்துவந்தவர். திருவாவடுதுறை யாதீனத்திலே மிக ஈடுபாடுடையவர். தமது ஞானசாரியரைப் பலபடியாக இக் கலம்பகத்திலே உண்மையாகப் பாராட்டுகிறார். இவர் பரம்பரைச் சைவ வேளாளர். இவரேயன்றி இவருடன் பிறந்தாரும் முன்னோரும் பின்னோரும் இத் திருவாவடுதுறை யாதீனத்திலேயே கல்வி கற்றுச் சிறந்து அறிவொழுக்க முடையவர்களாகத் திகழ்ந்தனர். ஆதின வித்துவான்களாக விருந்து ஆதீனத்தின் புகழைப் பல்லாற்றானும் பரவச்செய்தனர்.

சீனிப்புலவருடைய தந்தையார் சர்க்கரைப்புலவர் என்பவர். இவர் பாட்டனார் இவ்வாதீனத்திலே எட்டாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து சிவாநுபூதிச் செல்வர்களாகத் தெய்வீகம் பெற்று விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிக

ருடைய காலத்துச் (கி. பி. 1625—1658) சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகரிடத்துத் தமிழ்க்கல்வியும், சைவதிட்சையும், சித்தாந்த சாஸ்திரோபதேசமும் பெற்று விளங்கித்திருச்செந்தூர்க்கோவை, வேதாந்த சூடாமணிக்குச் சித்தாந்தவுரை முதலியன இயற்றிப் புகழ்பட வாழ்ந்தவர். இவருக்கு ஆதி—நெட்டிமாலைச் சர்க்கரைப் புலவர் என்றும் பெயர். தொண்ணூறு பிராயம்வரை இருந்தவர் இவர். இவருடைய தந்தையார் சாந்தா பிள்ளை என்பவர். பிந்திய சர்க்கரைப் புலவர் மிழலைச் சதகம் இயற்றித் தஞ்சை மகாராஷ்டிர மன்னர் பிரதாப சிங் (1739—1763) காலத்தில் அரங்கேற்றினர். பிந்திய சர்க்கரைப் புலவருக்கு (1) சாந்துப்புலவர் (2) சீனிச்சர்க்கரைப் புலவர் (3) சீனிப்புலவர் (4) முத்து முருகப் புலவர் எனப் புதல்வர் நால்வர் உளர். அவருள் சாந்துப் புலவர் மயூரகிரிக்கோவை பாடியவர், கி. பி. 1801-ல் சிவகங்கையை ஆண்டுவந்த மருதுபாண்டியன் என்பவர் பகைவர் கையில் சிக்குண்டகாலத்துப் பிரிவாற்ருது வருந்திச் சிறுகம்பையூராகிய தமது ஊரிலே உயிர் நீத்தார் இவர். மருதுபாண்டியன் காலம் (கி. பி. 1780—1801) மயூரகிரிக்கோவை அரங்கேற்றிய காலம் கி. பி. 1778—காளயுத்தி-தை 27உ சுக்கிரவார நாள் எனக் கோவை ஏட்டுப் பிரதியிற்கண்டதென்பர். இரண்டாங் குமாரராகிய சீனிச்சர்க்கரைப்புலவர் திருச்செந்தூர்ப் பரணி, புகையிலை விடுதூது என்னும் பிரபந்தங்களை இயற்றியுள்ளார். மூன்ருங் குமாரராகிய சீனிப் புலவரே இக் கலம்பக நூலாசிரியராவார்.

இனி,

"உரைதருவே தாந்தசூ டாமணியுட் பொருளை
யுலகினுள்ளோ ருணரவுரை செய்கவெனக் கடல்சூழ்

தரையரசன் சேதுபதி யமாத்தியனுந் தாமோ
தரன்கங்கா குலதிலகன் தகுதிபெறச் சாற்ற

வரையறுத்துச் சித்தாந்தப் பொருட்டிறனுந் தோன்ற
வகுத்தனனற் றுறைசைநமச் சிவாயதே சிகன்ருள்

பரவுசிவக் கொழுந்துநிதி யருள்கல்விக் கடலைப்
பருகுமுகில் சர்க்கரைநற் பாவலவர் கோனே.''

''என்னும் இவ்வுரைப் பாயிரம் இராமநாதபுரத்திலிருக்கின்ற நெல்லையப்ப பிள்ளை யவர்கள் குமாரர் எம்மோடு கற்றோரா கிய சாமிநாத பிள்ளை யவர்கள் பாடியது'' என வேதாந்த சூடாமணியுரை யேட்டிற் காணப்படுவ தென்பர்.

இனி, வேதாந்த சூடாமணியுரைக்குப் பாயிரம் இயற்றிய சாமிநாத பிள்ளை என்னும் சாமிநாத கவிராயர் திராவிடமா பாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளுடைய மாணவர்களுள் ஒருவராகிய இராமநாதபுரம்—சோமசுந்தர குருவின் சகோதரர் ஆவார். இவர்கள் இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான்கள். இவர்கள் தந்தையார் முற்கூறிய நெல்லையப்ப பிள்ளை என்பவர்.

இக் குருமூர்த்திகளுடைய சீடராகிய ஸ்ரீ சுந்தரலிங்க முனிவர் என்பவர் 2080 செய்யுட்கள் உள்ள ஆதி கைலாச மான்மியம் என்னும் திருப்பெருந்துறைப் புராணத்தை இயற்றியருளினார். இவ்வாதீனத்து 10-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீ முன்வேலப்ப தேசிகருடைய சீடராகிய ஸ்ரீ சாஸ்திரம் சாமிநாத முனிவர் 2600 செய்யுட்களில் திருவாவடுதுறைப் புராணத்தை இயற்றி இவ்வாசிரியர் திருமுன்பு அரங்கேற்றினார். இம் முனிவரே தஞ்சையை யாண்ட துளஜேந்திர மகாராஜா (1763—1787) விருப்பப்படி 1270 செய்யுட்களிலமைந்த திருப்பெருந்துறைப் புராணத்தை இயற்றினார். ஷ தலத்துக்கு ஒரு கலம்பகமும் இவர் அருளினார் என்பது அப் புராணச் சிறப்புப்பாயிரத்தால் தெரிகிறது. அது கிடைக்கவில்லை.

இனி. ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகள் மாணவர் பன்னிருவரில் இலக்கணம்—ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் இக் குரு மகா சந்நிதானத்தினிடத்திலே சிவஞானோபதேசமும் சைவ சந்நியாசமும் பெற்றுக்கொண்டார். மற்றொரு மாணவர்

இராமநாதபுரம் ஸ்ரீ சோமசுந்தர குருவும் இக் குரவரிடத்திலேதான் நிருவாண தீக்ஷையும் சிவஞானோபதேசமும் பெற்றனர். ஸ்ரீ மாதவச் சிவஞானசுவாமிகள், ஸ்ரீ மெய்கண்டதேவநாயனுரருளிச் செய்த சிவஞான போதத்துக்கு திராவிட மாபாடியம் அருளிச் செய்து தமது ஆசிரிய மூர்த்திகளாகிய 11-வது ஸ்ரீ பின்வேலப்ப தேசிகர் பெரியபட்டத்திலும் 12-வது திருச்சிற்றம்பல தேசிகர் சின்னப்பட்டத்திலும் எழுந்தருளியிருந்த காலத்திலே அவ்விரு குருமூர்த்திகள் திருமுன்பு கூடியிருந்த வித்துவ மகாசபையிலே அரங்கேற்றியருளினர்கள். ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகளுடைய முதல் மாணவராக வீற்றிருந்தருளிய கவிராக்ஷஸ—ஸ்ரீ கச்சியப்பமுனிவரர், மதுரகவி—தொட்டிக்கலே ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் ஆகிய இவ்விருவரும் திருச்சிற்றம்பல தேசிகர் பெரிய பட்டத்தில் எழுந்தருளியிருந்து சிவாகம ஆராய்ச்சியையே பொழுதுபோக்காகக் கொண்டு சிவானந்த நீட்டையிலிருந்த காலத்து அவருடைய கட்டளையின்படி அப்போது சின்னப்பட்டத்திலே எழுந்தருளியுள்ள ஸ்ரீ அம்பலவாண தேசிகரிடத்திலே சிவஞானோபதேசமும் சைவசந்நியாசமும் பெற்றனர். தொட்டிக்கலே ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் திருச்சிற்றம்பல தேசிகர் மீது சிந்து பாடியுள்ளார்.

இனி, ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் அருளிச்செய்து அரங்கேற்றிய காலம் கி. பி. 1772, ஸ்ரீ சுவாமிகள் சிவபரிபூரணமுற்றது கி. பி. 1785 விசுவாவசு–சித்திரை–ஆயிலியம் நாள். ஸ்ரீ கவிராக்ஷஸ கச்சியப்ப முனிவரர் சிவபரிபூரணமுற்றகாலம் கி. பி. 1790 சாதாரண – சித்திரை – புனர்பூச நட்சத்திரம். மதுரகவி — தொட்டிக்கலே ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் ஆவினன் குடிப் பதிற்றுப் பத்தந்தாதி அரங்கேற்றிய காலம் 1789— இலக வருஷம் தை-மீ ஆம்.

இனி, இத்திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகள் தென்னுட்டு யாத்திரை செய்த காலத்து இராமேச்சுரம் சென்று

தரிசித்து இராமநாதபுரத்திலே வந்து எழுந்தருளியிருந்தார்கள். அப்போது இராமநாதபுரம் சமஸ்தானத்திலே கௌரவம் பொருந்திய மகாராஜராஜஸ்ரீ சேதுபதியரசருக்கு மதிமந்திரியாகவுள்ள ஒருவர் நமது ஆதீனத்துச் சீடவர்க்கத்தினர். அவர் ஸ்ரீ மகாசந்நிதானம் சேதுநாட்டில் எழுந்தருளியிருக்கும் செய்தியை மஹாராஜாவுக்குத் தெரிவித்தார். அப்போது மகாராஜா அவர்கள் "உம்முடைய ஆசிரியராகிய மகாசந்நிதானம் இங்கெழுந்தருளியிருப்பது நல்லதே. ஆயினும் பல ஆண்டுகளாக மழையின்றி இந்நாடு வற்கடந்தால் வாடுவதைத் தவிர்க்க முடியுமாயின் நாம் திருவாவடுதுறையாதீனத்துக்குக் கொத்தடிமை குல அடிமையாவோம். இதனை, சமயமறிந்து சந்நிதானத்தில் விண்ணப்பிக்க" என அமைச்சருக்கு அறிவுறுத்தினர். மேலும், அமைச்சருடன் அரசரும் காணிக்கைப்பொருள்களுடன் குருமகாசந்நிதானத்தைத் தரிசிக்க எழுந்தருளினர். மஹா சந்நிதானத்துடன் மஹாராஜா அவர்கள் அளவளாவியிருக்கும்போது மதியமைச்சர் மன்னருடைய மனக்குறையை விண்ணப்பித்தனர். குருமூர்த்திகள் மதியமைச்சருடைய வேண்டுகோளைத் திருவுளத்துக்கொண்டு அரசரைப் பார்த்து அவ்வாறே, ஸ்ரீஞானமாநடராசர் திருவருள் செய்வார்' என அருளினர். உடனே அரசர் ஆணைப்படி விசேட அபிஷேக ஆராதனைகளுக்குரிய பொருள்கள் சேகரிக்கப்பட்டன. நமது ஞானதேசிகர் ஞானமா நடராச மூர்த்திக்குச் சிறப்பாகப்பூஜை செய்து முடித்துத் தேவாரத் திருப்பதிகங்களில் மேகராகக் குறிஞ்சிப் பண்களைப் பாடப்பணித்துத் தாம் பஞ்சாக்கார செபத்துடன் சிவானந்த நிட்டையில் நெடுநேரம் இருந்து விட்டனர். மேகங்கள் நல்ல மழை பொழிந்தன. மன்னர்பிரான் மகிழ்ந்து ஆசாரியரைத் தரிசித்து வணங்கி மாகேசுரபூஜை சிறப்புற நடத்திச் சபாபதி பூஜையின் பொருட்டும், குருபூஜை மாகேசுர பூஜைகளின் பொருட்டும் சர்வமானிய கிராமங்கள் விட்டுக் கொடுத்துச் செப்புப் பட்டயங்களும் தந்தனர். இதனையே இப்புலவர்பிரான் 'தாயே அருட்கடலே' எனப் (98 செ.) பாராட்டுகின்றனர்.

இனி, திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகள் சேது வேந்தர் வேண்டுகோளுக் கிணங்கிச் சிவானந்த வீட்டையி லிருக்கும்போது சொல்லிய பாடல் வருமாறு:—

வெண்பா

"சைவ சமயஞ் சமயமெனின் அச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனின்—ஐவரை வென்(று)
ஆனந்த இன்பில் அழுந்துவது முத்தியெனின்
வானங்காள் பெய்ம்மின் மழை." என்பது.

மழை பெய்து தம்நாடு வளம் பெற்றதற்கு உவந்து பொற்கோட்டை என்னும் ஊரைச் சேதுவேந்தர் இத்திருவா வடுதுறை ஆதீன மடத்துக்கு முற்றூட்டாக அளித்தபோது ஞான தேசிகர் மகிழ்ந்துசொல்லிய பாட்டு இது.

வெண்பா

"நதியாம் விரிசிலை நன்னகர்பொற் கோட்டை
பதியாந் துறைசைப் பதிக்கு—விதியாகத்
தானமிட்டான் சேதுபதி தாரணிதா னுள்ளளவும்
ஊனமிலை யெந்தநா ளும்." என்பது.

இதனைக் கருதியே இவ்வாதீனத்தில் 'சேதுபதியன்னமும் காவிரிநீரும் ஆவுடையப்பர் நீழலும்' எனக்கூறும் பழமொழி யெழுந்தது. இப்பாடல்கள் இரண்டையும் இராமநாதபுரம் வித்வான், உப. வே. மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் தாம் தொகுத்துதவிய 'பெருந்தொகை' நூலிலே குறிப்பிட்டிருத் தலுங் கருதத்தக்கது.

இனி, பவானிகூடற் புராண ஆசிரியர் வாசுதேவ முதலியார் குருவணக்கங் கூறுமிடத்து இந்த ஞான தேசி கருக்கு வணக்கம் கூறியிருத்தலால் அவரும் இவருடைய மாணவர்களுள் ஒருவரெனக்கருதப்படுகிறது.

இவ்வாதீனத்து வழக்க வொழுக்க விழுப்பங்களையும், சம்பிரதாயங்களையும், இக்கலம்பக முகமாக இப்புலவர் பிரான் அங்கங்கே எடுத்துப் பாராட்டுகின்றார். தமக்கு வித்தியாகுருவாகவும் ஞானாசிரியராகவும் உள்ள திருச்சிற்றம் பல தேசிக மூர்த்திகளுடைய உண்மையான இயல்புகளனைத் தையும் இடந்தொறும் இடந்தொறும் கூறித் தம் நாவி லுள்ள தினவைத் தீர்க்கக் கருதுகின்றார். அத்தினவு தீர்ந்த தாக ஒருவாற்றானும் புலப்படவில்லை. ஞானதேசிகருடைய தவத்தைக் கூறவந்தவர் :

"அறத்தின் தேவதுவார் திருச்சிற்றம் பலவர்" (8);

"சீர்த்தவ வடிவாயுதித்த திருச்சிற்றம்பலவன்" (11);

"மோன தவனே" (35);

"திருச்சிற்றம் பல குருவே தவத்தர் கோவே" (39);

"தவ மெல்லா மண்டுபுகழ்த் திருச்சிற்றம் பலர்" (66);

"தவ வடிவே" (67);

"பெருகு தவந்தீராமை யாற்று திருச்சிற்றம்பலவர்" (84);

என்று புகழ்கின்றார். இவருடைய துறவு நிலையையும், ஐம்புல வொடுக்கத்தையும் "திருச்சிற்றம்பல வெதி" (53); "துறை சைச்சைவதுல்லியர் எதிராசர்" (54); "தாரணி யெங்கும் பணி யெதிராசர்" (60); "சீலத்தால் ஒருவரை" (72); "ஐம்படைப்புன் காமனை வென்றடர்த்து ஞானப் பொருள் படைக்குந் துறைசை வரு திருச்சிற்றம் பலகுரவன்" (69) எனப்பாராட்டிச் சொல்வர்.

தமதாசிரியர் சிவாகம ஆராய்ச்சி பெரிது முடையவர், கல்வி நல மிக்கவர், தருக்கநூற்புலவர், மெய்கண்டசாஸ்திர நிபுணர், தேவார முதலிய திருமுறை வல்லுநர் எனக்கலம்பக ஆசிரியர் குறிப்பிடுகிறார். "சைவக்கலைதாங்கு கல்வி நல முடையவர்" (25); பேசுவது மெய்காணப்பெற்ற சைவ நன்னூலே" (51); "தவத்திற்கிங் கொருவன் தருக்கிக்குங்

கலைஞன்'' (40) மதிதருங்கலை யெழுத்துத்தங்கிதழ் வாய விழ்ந்திட முறைபயின்றன'' (12) "திருச்சிற்றம்பலவர் சைவாகமத் தையர்'' (60) என்பன அவை.

இனி,ஞானசிரியர் சிவோகம் பாவனையுடன் திருக்கரத்தைச் சீடன் சிரத்தில் வைத்துப் பாசமுற்றுங் கெடப்பண்ணல் (12);உடல் பொருள் ஆவியை ஆசிரியர் ஏன்றுகொள்ளல் (42); உபதேசம்(62); குருவருளை மிகச் சேய்வன இவை(5); குருவை எப்போதும் வணங்குவோர் பெறும் பேறு (15); மானைக் காட்டி மானைப்பிடிக்கும் வேடரியல்பு (34)'சிவபிரானும்,ஸ்ரீமெய்கண்ட தேவரும் தமதாசிரியராகிய திருச்சிற்றம்பலவரே (35); இடபவாகனத்தையே சிவிகையாகக் கொண்டு சிவபிரான் திருச்சிற்றம்பல தேசிகராக வுருக்கொண்டமை (70); கருட தியானத்தால் நஞ்சின்வலி கெடுவது போலச் சிவோகம் பாவனையால் மலவலி கெடல் (83); சிவஞானோபதேசப்பேறு(45); யாமே பிரம மென்பவர் பசுஞான முடையவர்(63); உபதேசத்தினுலுளவாகும் பெருமை(71) முதலிய சைவ சம்பிரதாயங்களை விளக்குகிறுர். மாகேசுரபூசை இயல்பு, அன்னக் கொடியேற்றி வந்தோருக் கெல்லாம் அன்னமளித்தல்(16); ஞானமா நடராசர் பூசை(76); சபாபதி பூசை(50); பூசையிலோதுந் தேவாரம்(57); கைத்தாளவோசை (52); அரகரமுழக்கம்(49); வைத்தியநாதர் ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரியருடைய பூசையி லுள்ளவர்(76); அடியார்க்காவன(82): இருவினைக் கீடாகவே யாக்கை கிடைத்தல் (79); மனம் அருவமானது(85); கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி சிவம் பூசித்த சபாபதியே ஞானமாநடராசர்(86); இனிப்பிறப்பும் வேண்டப்படும்(87); பந்தியிலுணவு(90); சேகண்டி நாதம் (91); சித்தபுருடர் ஓசை நித்தலுங் கேட்டல் (94); சேகண்டியோசை, சங்கமுழக்கம், கைத்தாளம், ஐந்துகொத்து மணியோசை, தேவாரப் பண் இவைகளின் இயல்பு(99); நமன் முதலியோரியல்புகள் (71, 69, 58,) கற்றதனுற் பயன் (77); நாடோறும் மடத்தில் எல்லோரையும் அழைத்தமுதருத்துதல்(70): திருநீறளித்தல்(82) குரு மிச்சி லுண்டல்(41); தேவார மோதுவார் மரபு(39); பாத காணிக்கை குருவுக்குச்

செலுத்துதல்(98); திருமால், பிரமன், இந்திரன் முதலியோர் வாழ்வு கனவே என்பதும் சிவபோக நுகர்வும்(87); அடியார் கூட்டத்தில் கூட்டினமை(97, 101); புலவருக் கறிவுறுத்தல் (14, 80); முதலிய செய்திகள் அறிந்து இன்புறத் தக்கன. தழைவிருப்புரைத்தல் 33, கிள்ளைவிடுதூது 36, இரங்கல் 37, வேழம் வினுதல்—44 முதலியன அகப் பொருட் செய்திகள்.

மடக்கணி யுடையன 7, 30, 32, 37, 61, 72–ஆம் பாடல்கள். கலம்பகங்களில் கூறப்படாத பாம்பு என்ற உறுப்பு இதன்கண் வந்துளது. சில உவமைகள் வருமாறு:—ஆற்று வெள்ளத் தங்கணநீர் 97, வயல்பாயுந் தண்புனல் புல்லுக்கும் பாய்தல் 101, கானிற்றுரும்பு 62, மானைக் காட்டி மானைப் பிடித்தல் 34 முதலியன.

இனி, திருவாவடுதுறை யென்பதைக் கோமுத்திபுரம், பெற்ற முத்திப்பதி, தேனு முத்திபெறு புரம் எனப் பரியாயப் பெயராக அமைத்துள்ளார் இவர். தேவார இசைகற்கத் தும்புரு நாரதர் வருதல், விண்ணோரும் மானிடராகவர எண்ணுதல், நாகரும் போற்றுதல், திருவடியே கயிலாயம் சர்வமானியம், அடியாரை அமரரும் சேவித்தல் முதலிய சில செய்திகளும் இன்புறற் பாலனவே. குரு திருமேனிக்காட்சிச் சிறப்புக் கூறுவது 74—ஆம் செய்யுள். வெள்ளித் தேர் கைலாயக் காட்சியை யொப்பச் செய்து தந்த முத்துக்குமர பிள்ளை என்பவர் சேதுபதி மதியமைச்சர். அத்தேர் அக்காலத்து ஆறுயிரம் ரூபா செலவிலமைத்தது. இக்குறிப்பு மதுரைத் தமிழ்ச்சங்கத்துச்செந்தமிழ்ப் பத்திரிகை தொகுதி — 21, பக்கம் 200-ல் காண்க. இக்குறிப்பை எழுதி யுபகரித்தவர் திருவாவடுதுறை யாதீன வித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகரும் ஆகிய ஸ்ரீ சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள். இக்கவிராயரவர்களும் இவர் சகோதரர்களும் இவ்வாதீனத்துச் சின்னப்பட்டம் ஸ்ரீ நமச்சிவாய தேசிகரிடத்துக்கல்வி பயின்றவர்கள்: சேற்றூர் சமஸ்தான வித்வான்கள். கருவிலேதிருவுடைய கவிவாணர்கள்.

"இனித் தாரணிமேற் றிவனிலை மாறிமற் றெங்கெழுந் தாலென்ன செங்கதிரே" என்னும் இக்கலம்பகப் பாடற் பகுதி "எங்கெழிலென் ஞாயி றெளியோ மல்லோம்" என்னும் தேவாரப் பகுதியையும் நினைவிற்குக் கொண்டு வருகிறது.

இக் கலம்பக நூல் எனக்குக் கிடைக்கச் செய்த திருவருளை எண்ணுந் தொறும் எண்ணுந் தொறும் என் மனம் இடையறு துருகும்: பெருவியப்பை யுண்டுபண்ணும். யான் மயூரகிரிக் கோவையைப் பாடங் கேட்டகாலத்து அக் கோவையின் முகவுரைப் பகுதியானும், ஸ்ரீமத். உப. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமிகள் எழுதியுள்ள சேதுநாடுந்தமிழும் என்ற வசன நூலானும் துறைசைக் கலம்பகத்தைப் பற்றிய செய்தியறிந்து கொள்ள நேர்ந்தேன். பின்பு என் தமிழாசிரியரும், திருவாவடுதுறை யாதீன வித்துவானும் ஆகிய ஸ்ரீ. சு. பொன்னோதுவா மூர்த்திகளிடத்து இந்நூலைப் பற்றிக் கேட்ட போதும் தெரிந்து கொள்ளக் கூடவில்லை. மற்றும் பல இடங்களில் விசாரித்து வரலானேன். எனக்கு முன்பு இவ் வாதீன வித்வானாக விருந்த ஸ்ரீ. வி. சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்களிடத்தும் இந்நூல் விஷயமாக உசாவினேன். ஒன்றும் புலனாக வில்லை. ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமஹா சந்நிதானம் எளியேன் மேலுங் கருணைகூர்ந்து நாயினுக்குத் தவிசிட்டாற் போல இவ்வாதீன கைங்கரியத்தை ஒன்றுக்கும் பற்றாத என்னைச் செய்துவரப் பணித்தருளிய கட்டளையைச் சிரமேற் கொண்டு ஆதீன நூல் நிலயத்தை ஒழுங்கு படுத்தி ஆராய்ந்த காலத்திலே கண்ணுங் கருத்துமாக இக் கலம்பகத்தைத் தேடியுங் காணேன். மிகக் கவன்றேன். ஸ்ரீ திருமாளிகைத் தேவரிடத்தும், ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரிய மூர்த்திகளிடத்தும் விண்ணப்பித்து வந்தேன். எளியேன் வேறென்ன செய்ய வல்லேன்.

ஒருநாள் வழக்கம் போலச்சென்று ஸ்ரீஞானமாநடராசர் பூசையும் குருமூர்த்தமுந் தரிசித்து ஒடுக்கத்திலே போய் விபூதிப் பிரசாதம் பெற்று மாகேசுரபூசையும் நடந்தேறிய

வுடன் ஸ்ரீ-ல-ஸ்ரீ மஹாசந்நிதானம் ஏழையேனை அழைத்தருளியது. அடியேன் சந்நிதானத்தை வணங்கி யெழுந்து விபூதி பெற்றுக் கொண்டேன். அப்போது ஒரு காகிதப்பிரதியைத் தமது திருக்கரத்தா லெடுத்து அனுக்கிரகம் செய்து அடியேனிடம் கொடுத்தருளியது. அதனை வணக்கத்துடன் பெற்றுப் பிரித்துப் பார்த்தேன். நெடுங்காலமாக வேண்டியிருந்த திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகமாக இருந்தது அப்பிரதி. உடனே எல்லையில்லா ஆனந்தங் கொண்டு பலமுறை விழுந்து விழுந்து பணிந்தெழுந்தேன். வேறொன்றுந் தோன்றாதவனானேன். கண்ணீர் மாறாது பெருகியது. பேச நாவெழவில்லை. தேம்பித் தேம்பித் திகைத்தேன். பிரித்த காலத்துத் தோன்றிய பாடலைப் படித்துப் பொருளையுணர்ந்து மகிழ்வடைந்தேன். எல்லாம் சிவச்செயல். குருவருள். அப்பாடல் வருமாறு :—

"இடரேது மினியில்லைப் புள்ளிருக்கு வேளூரி
லென்றுங் கோது
படராத துறைசைநமச் சிவாயருக்கு முன்னின்ற
பரமர் தம்மை
நடராச ரொடுபூசை திருச்சிற்றம் பலவர்செயு
நாளி லோர்நாள்
விடரேனுந் தவரேனுந் தரிசித்தால் வினைகளெல்லாம்
வீடுந் தானே." (76—செய்யுள்) என்பது.

இனி, ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

"வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதுந்
[தருவோய்நீ,
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப்
[பணிகொண்டாய்,

வேண்டி நீயா தருள்செய்தாய் யானு மதுவே
[வேண்டினல்லால்,

வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு முன்றன்
[விருப்பன்றே.''

என்னும் அருமைத் திருவாசகம் என் நினைவிலிருந்து ஊக்கி விட்டு ஆதீனப் பணிகளைச்செய்விக்கின்றது. அதன் பின் இக் கலம்பகத்தை ஆராய்ந்து படித்து இயன்ற வரை ஒரு குறிப் புரையும் எழுதிச் சேர்த்துள்ளேன். இக் கலம்பகத்தைச் சித்திரை மாதத்திலேயே அச்சிடத் தொடங்கியும் இடை யிடையே நேர்ந்த சிலபல அலுவல்களாலும், 26—வது வெளி யீடாகிய இக் கலம்பகம் அச்சிடுவதற்கு முன்னமே சித்திரை ஆயிலியநாளில் ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிக ளருளிச் செய்த 'அத்துவித வாக்கியத் தெளிவுரை'யை (27—வது வெளியீடு) அச்சிட்டு வழங்க வேண்டி யிருந்தமையாலும், இவ்வாதீனத்து எட்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீ மாசிலா மணி தேசிகர் அருளிச் செய்த 'திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழைப்' பல ஏட்டுப் பிரதிகள் வைத்துப் பரிசோதிக்க வேண்டி யிருந்தமையாலும், திருவாவடுதுறை யமக வந்தா திக்குப் பதவுரை யொன்றெழுதி வந்தமையாலும், திருவா வடுதுறைப்புராணம் திருவீழிமிழலைப் புராணங்களை அச்சிடச் சித்தம் செய்து வந்தமையாலும் காலந்தாழ்த்தது.

இனி, இப்பொழுது இவ்வாதீனத்திலே இருபதாவது குருமஹா சந்நிதானமாக வெழுந்தருளியிருந்து குருக்ஷேத்திர பரிபாலனம், சிவக்ஷேத்திர பரிபாலனம், செந்தமிழ்ப் பரி பாலனம், சித்தாந்த சைவ சமய பரிபாலனம் முதலிய பல வற்றையும் இவ்வாதீன சம்பிரதாயங்களுக்கு விரோத மின்றிச் செய்வதுவருதோடு உலகோப காரமான பல தர்மங் களையும் மக்களுக்கு இன்றியமையாமை யறிந்து செய்வித்து மக்கள் மனத்திலெழும் பெருமகிழ்ச்சியை யறிந்து திருவுள மகிழும் பெருங் கொடைவள்ளலாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண


தேசிக பரமாசாரிய சுவாமிகள் கட்டளையிட் டருளியபடி இதனைப் பரிசோதித்து என் சிற்றறிவுக்கு எட்டிய அளவி லெழுதிச் சேர்த்த குறிப்புரையுடன் இப்பொழுது வெளிப் படுத்தியுள்ளேன். குணங் கொண்டு கோதாட்டுதல் அறிஞர் கடன்.

"கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநுவாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
தழைக மாதோ."

ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள்.

திருவாவடுதுறை,
10—9—49.

த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை,
ஆதீன வித்துவான்.



திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து
20-வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரியசுவாமிகள்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

துறைசைத்
திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம்.

சிவப்பிரகாச விநாயகர் காப்பு.

நேரிசை வெண்பா

சிறைபகற்றி யாண்டதிருச் சிற்றம் பலவர்
துறைசைக் கலம்பகத்தைச் சொல்லக் — குறைதீர்
சிவப்பிரகா சற்றமலர்ச் சேவடிக்கேன் றேதுஞ்
சிவப்பிரகா சப்பெயர்த்தந் தி.

அரும்பதவுரை :

சிறையகற்றி—தேகச் சிறையை நீக்கி, காசு அற்ற மலர்ச்சேவடிக்குச் சிவப்பு இர என்று ஓதும் தந்தி—* குற்றமற்ற செந்தாமரை மலர் போலுஞ் சிவந்த திருவடி நிறத்திற்குச் சிவப்புநிறம் இருளேயென்று கூறப்படும் விநாயகர் என்க. இவ்வாறே "முறுக்கிதழ் கறுக்குமெய் சிவப்பொளி" என்றார் பிறரும். இரா என்ற சொல் "குறியதன் கீழாக் குறுகலும்" என்னும் விதி பற்றி "நிலவிரிகானல்" என்புழிப் போல இரஎனக் குறுகிற்று.

குறை—இடையூறு: அறிவுக்குறைவும் ஆம். அறியாமை யாகிய குற்றமென்றலுமொன்று. தந்தியென விளித்துக் குறைதீர் என முற்றுவினைப் பயனிலையோடு முடித்துக் கொள்க.

---

* திருவாவடுதுறை மடாலயத்தின் வடக்கு வாயிலிற் றிருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் விநாயகருக்குச் சிவப்பிரகாச விநாயகரென்று பெயர். இவ்விநாயகப் பெருமானை ஆதி குருமூர்த்தியாகிய ஸ்ரீநமசிவாய தேசிகருடைய பரமாசாரியராகிய சித்தர் சிவப்பிரகாசர் நிறுவியதால் இத் திருநாமம் எய்திற் றென்பர் ஆதீன சம்பிரதாய முணர்ந்தோர். இவ்வாதீனத்திற் பதினுருவது பட்ட மெய்திய ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இப்பெருமானை ஸ்ரீ நமசிவாய மூர்த்தி சந்நிதியில் எழுந்தருளச் செய்திருந்தனர். பின்னர் பத்தொன்பதாவது பட்டத்திலெழுந்தருளியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ வைத்தியலிங்க தேசிக சுவாமிகள் அப்பெருமானுக்கு வடக்கு வாயிலில் திருக்கோவிலமைப்பித்து நித்திய பூசனை முதலியன நடத்தக் கட்டளையிட்டருளினர்கள்.

நூல்

ஒருபோகு மயங்கிசைக் கோச்சகக் கலிப்பா.

இஃது எட்டடித்தரவு.

நீர்மேக மனையானு நிறைகமல மனையானுஞ்
சீர்மேவு சேவடியுந் திருமுடியுங் காண்பரியான்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந்தன் மெய்யடியார்
தெரிசித்த வுடனவரைச் சிவமாக்கத் திருவுருக்கொண்
டந்திவண்ணர் திருக்கயிலை யரியமுதற் கடைகாவல்
நந்திமுதற் பதின்மர்கட நல்லருட்சந் ததியாகித்
தென்புவிவாழ் துறைசைநமச் சிவாயர்முதற் பதினொருவர்
பின்புசைவ குருவாகிப் பெயர்புனைந்த பெரியோனே.

இவை ஆறும் ஈரடித்தாழிசைகள்.

விருதூரும் விடையுடையார் வீற்றிருக்க வேற்றவிடை
மருதூரென் றிசைபடைத்த வளம்பதிக்குக் கீழ்த்திசையிற்

பூவிரிக்குஞ் சோலையிடைப் பொறிவண்டு பண்விரிக்குங்
காவிரிப்பேர்த் திருநதியின் கரைதனக்குத் தென்றிசையிற்

கேயூர மாயூருங் கிளரரவப் பணியாளர்
மாயூர மாவூரின் வசையறுமேற் றிசையதனிற்

காஞ்சியினு மதிகமெனக் கண்ணுதலா ரண்ணலுறை
வாஞ்சியமா கியநகரின் வடதிசையி னடுவாக

வைப்பிலா கியசோதி மாசிலா மணிநாத
ரொப்பிலா முலையுடனே யுறைதிருவா வடுதுறையிற்

கருச்சுற்றும் பெரும்பிறவிக் கடலிலெனை யெடுத்தாண்ட
திருச்சிற்றம் பலவபுகழ் திகழ்தருசிந் தாமணிகேள்.

இவை நான்கும் அராகங்கள்.

பதிபசு வொடுதளை பகர்பொரு ளுயர்பதி
யதுவொரு விதமுயி ரறைதரு திரிவித

முறையறு தளையவை மொழியிலை விதமுள
விறையடி யுளமிசை யெழுதிடி லிலைதளை

யுதகமொ டுவர்நில வவதென வுயிரொடு
சுதமிலி கலவிசெய் துறுமறு பவமறுந்

தவிடுமி யறவொளி தருமரி சியின்முளை
யவிர்தர னிகரென வருளினை யொருமொழி.

இவை நான்கும் பெயர்த்தும் ஈரடித்தாழிசைகள்.

தீம்பாகு முக்கனியுஞ் செந்தேனும் பைங்கரும்பும்
வேம்பாகு மம்மொழிபோல் வியன்சுவையுண் டாயிடுமோ

ஓண்செவியின் வழியோடி யுள்ளுருகிப் பசுகரண
மென்செவிய சிவகரண வியல்பாக்கிற் றம்மொழியே

இறந்தநாள் வீணளா மினிதாவுன் றிருவாக்குப்
பிறந்தநா ளிதுவன்றே பிறந்தநா ளடியேற்கே

உற்றேவல் வினையறுத்திட் டோங்கியநின் பூங்கழலிற்
குற்றேவல் கிடைத்திடுமேற் கூடுமுத்தி யிதில்வேறே.

இவை இரண்டும் இருசீரடி யம்போதரங்கங்கள்.

மெய்கண்ட கலைத்தவனீ
மேதைநெறி நிலைத்தவனீ
பொய்கண்டு தீர்ந்தவனீ
புன்பிறவி ஈர்ந்தவனீ!

இவை எட்டும் இருசீரோரடி யம்போதரங்கங்கள்.

மதிகொடுத்தனை துதியடுத்தனை
மயலகற்றினை செயலையெற்றினை
கதியளித்தனை யெதிர்விளித்தனை
கரமமைத்தனை யரில்குமைத்தனை.

எனவாங்கு, (தனிச்சொல்)

நேரிசையாசிரியச் சுரிதகம்.

செவ்வியின் மலர்ந்த செந்தா மரையிதழ்
நவ்வியின் மதியொடு நட்புற் றமர்ந்தன
வெள்ளுகிர்ச் செவ்விரன் மேற்பட விளங்கி
யள்ளற் பிறவி யலைகடற் புணையா
யனிச்சப் பூவு மன்னத் தூவி யு
மினிச்சில பொறுக்கு மென்னச் சிவந்து
மெய்யடி யாருள மென்மலர் போலப்
பொய்யடி யேன்மனப் பொறையினும் பயின்று
தருவடி வைந்து மிருவடி வாகிக்
கருவடி களைந்தநின் றிருவடி வணங்குவன்
மூவகைப் பந்த முட்டற நீக்கி
யாவகை தருஞா னதிக னுதவி
நெறியுறு ஞான நிட்டையி
னறியா தறியு மறிவரு ளெனவே.

அரும்பதவுரை:

கமலம் மனையான்—தாமரை மலராகிய வீட்டிலிருக்கும் பிரமதேவன். பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துஞ் சிவமாக்கலைச் சிவஞானசித்தியார் 323 வது திருவிருத்தத்திற் காண்க.

பதின்மர்களாவாரும் பதினொருவராவாரும்.

"1 திருநந்திகுரு 2 சனற்குமாரர் 3 சத்தியஞான தெரிசினி 4 பரஞ்சோதியார் திகழு 5 மெய்கண்ட 6 ரருணந்தி 7 மறைஞானசம்பந்தரொ 8 டுமாபதிசிவம் 9 அருணமச்சிவாயர் 10 சித்தர் சிவப்பிரகாசர் அணி துறைசை 1 நமசிவாயர் ஆரணம்பரவு 2 மறைஞான 3 ரம்பலவாணரவி 4 ருருத்திரகோடியார் பொருவில் 5 வேலப்பரிரு 7 குமரசாமிக்குரவர்புகழ் 8 மாசிலா மணியர்தம் புதல்வரெனவரு 9 ராமலிங்கரிரு 11 வேலப்ப போத ரெமையாள வேண்டிவரு திருச்சிற்றம்பலக்குர வர் அம்பலவாண குரு சுப்பிரமணிய வரதனம்பலவாண குரு சுப்பிரமணியரம்பலவாணரடிகள் போற்றி" வைப்பு இல் ஆகிய—தன்னைத் தோற்றுவிப்பார் ஒரு தலைவரின் றித்தானே தனதிச்சையால் சகளீகரித்த. புதையற்றிர வியம் என்பாருமுளர்.

ஒருவிதம்—ஒன்றாக அறியப்படுதல். ஒன்றென்ற லும் ஆம். திரிவிதம் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூன்று பிரிவு.

தளை—பந்தம். ஐவகை—ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி என்பன. உதகம்—நீர், உவர்—உப்பு, சுதமிலி—அழிவில்லாத சிவம். கலவி—கலப்பு. மறுபவம்—வருபிறப்பு.

'தவிடுமி யறவொளி தருமரி சியின்முளை
யவிர்தர னிகரென வருளினை யொருமொழி'

முளைதோன்றுவதற்குக் காரணமாகிய தவிடும் உமி யும் நீங்கிய அரிசியில் முளைத்தற்சத்தி தோன்றுமாறு போல அறிவு இச்சை செயல்களாகிய காரணங்களின் உரு சிறிதும் இலவாகிய எளியேனுக்கும் ஸ்ரீ பஞ்சாக் கரத்தை அருளினையென்க.

ஒருமொழி—பெரும்பெயர், இதனை வடநூலார் மகா வாக்கியம் என்பர். இச் செய்யுளின் கருத்தை "சுருதிக ளொருகோடி சொல்லினுந் தோன்றுமென்றிடுகுணலே, சொரூபானந்தன் ஓர் சொல்லிலானந்தந் தோன்றிடு மென்றிடுகுணலே" என்னும் தத்துவராயர் திருவாக்கா னறிக.

அம் மொழி—குருமொழி. அகர்ம்—பண்டறிசுட்டு.

அம் மொழியே ஒண் செவியின் வழியோடி உள் ளுருக்கி என் பசுகரணம் செவ்விய சிவகரண இயல்பாக் கிற்றென்க.

செவி—தொகுத்தல். இறந்தநாள்—திருவாக்குக் கேளாது கழிந்தநாள்; வீணாகும். ஆம்—ஆசை. குற் றேவல் கிடைத்திடுமேல் என்றது கிடைத்தலருமை என் பது விளக்கி நின்றது. மயல்—மயக்கம். செயல்—கன்மம். எற்றல்—கெடுத்தல். கரமமைத்தல்—அபயஞ்செய்தல். அரில்—குற்றம். கலைத்தவன்—கலையோடுகூடிய தவத்தை யுடையவன். மேதை—அறிவு.

நவ்வி இல் மதி—மானென்னுங் களங்கமில்லாத சந் திரன். உகிர்—நகம். அள்ளல்—சேறு. தூவி—இறகு. பொறை—கல். தரு—பஞ்சதருக்கள். கருவடி—கருவின் மூலம். மூவகைப்பந்தம்—ஆணவம் கன்மம் மாயை யின்கட்டு. ஆவகை தரும்—மேன்மையுறுத்தற் கேதுவா கிய. ஞானுதி—ஞானமுதலியவைகள். அறிவு—மெய்ஞ் ஞானம்.

நேரிசை வெண்பா.

2. வேறியர்க ளாரணமு மெய்யாக மத்தொகையு
மோதி யறியநமக் கூழிசெலும்—நீதி
திருத்துறைசை மேவுதிருச் சிற்றம் பலவ
ரருட்பெருகு மோர்மொழியே யாம்.

கட்டளைக் கலித்துறை.

3. ஆமா றுரைப்பன் மனமே குயிலிசை யார்ந்தடருந்
தேமா மரநிறை செங்கனி தூங்குஞ் செழுந்துறைசைக்
கோமா னெனுந்திருச் சிற்றம் பலகுர வன்குளிர்தாட்
பூமா நிழலணை யானந்தந் தேன்வந்து பொங்கிடுமே.

அரும்பதவுரை :

பூ—பொலிவாகிய. மா—பெரிய. தாள் நிழல்—திருவடி நீழல். பூவையுடைய மாமரமெனினுமமையும்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

4. பொங்கி டும்புனல் படர்காவிரி
புடைத்துச் சந்தகி லலைமேல்விடு
துங்க மொன்றிய திருவாவடு
துறைக்குட் டங்கினெ னிருள்கீறின
னெங்க ணும்புக நிலவேறிட
வெனக்குப் பங்கய மலர்போலொளிர்
செங்க ரந்தனை முடிசூட்டிய
திருச்சிற் றம்பல குருசாமியே.

அரும்பதவுரை :

பொங்கிடும்—மிகப்பெருகும். புடைந்து—தாக்கி. சந்து—சந்தனமரம். துங்கம்—உயர்வு. இருள்—மலவிருள். கரத்தை முடிசூட்டிய—அத்தமத்தகசையோகஞ்செய்த. செபிக்கில்—சொன்னால்.

பஃறொடை வெண்பா.

5. குருசாமி பாதமலர் கும்பிடுவா நாமென்
றொருநகா னினைக்கி லுயர்கரும மெய்துந்
தருமடத்திற் சேரிற் றவமெலாங் கூடுந்
திருநாம மோர்காற் றெரிக்கிற் செபமாம்

வடிவதனைக் காணின் மகாபாவனையா
நெடிது பணியி னிமல வறிவெய்தும்
பத்தி யுடனே பணித்தன செய்வார்க்கு
முத்தி யிரண்டு முதன்மை பெறவெய்துந்
தென்றுறைசை மேவுதிருச் சிற்றம் பலகுரவ
னென்று மருளுடையா னே.

அரும்பதவுரை:

நிமல அறிவு—மெய்ஞ்ஞான உணர்ச்சி. முத்தி இரண்டு—பரமுத்தி அபரமுத்தி என்பன.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

6. யானென்று மெனதென்று மகப்பற்றும்
புறப்பற்று மெய்தா வண்ணந்
தானென்று வலிந்தாண்டு காயமொடு
பொருளாவி தனக்கே கொண்டான்
றேனென்ற மொழித்துறைசைத் திருச்சிற்றம்
பலகுரவன் றிசைசூழ் பாரில்
வானென்றும் பெய்வதுபோ லருள்புரிந்த
வதற்கொருகைம் மாறி லேனே.

அரும்பதவுரை:

சீடர் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஆசாரியருக்குத் தத்தஞ்செய்தலால் தனக்கேகொண்டானென்றார்.

பொருளென்றது இருவினைகளை. இதனை அத்துவித வாக்கியத்திற் காண்க.

கட்டளைக்கலிப்பா (மடக்கு)

7. மாறி லாதருள் பேரருள் வாரியன்
மதிக்க ருங்கலை யோதிய வாரியன்
மீறி யேயருள் சேர்திருக் கண்ணினன்
விளங்கு மாவடு தண்டுறைக் கண்ணினன்
ஆறு சேர்சடை யம்பலத் தாண்டவ
னருச்ச னைக்குரித் தாகவந் தாண்டவன்
தேறு மஞ்செழுத் தோதிய நாவனே
திருச்சிற் றம்பல தேசிக னவனே.

அரும்பதவுரை:

அருள்வாரி—அருட்கடல். ஆரியன்—ஆசாரியன். ஆவடுதண்டுறைக்கு அண்ணினன்—திருவாவடுதுறையின் கண் ணெழுந்தருளியிருப்பவன். கு வேற்றுமை மயக்கம். அண்ணுதல்—ஈண்டு எழுந்தருளலின்மேற்று.

கட்டளைக் கலித்துறை.

8. ஆவது முத்தி யறிவது பாச மருளறத்தின்
றேவது வாந்திருச் சிற்றம் பலவரைத் தேமலர்ப்பூங்
காவது சூழுந் துறைசை மடத்தினிற் கண்டுநெஞ்சே
நாவது வாழ்த்த முடிதாழ்த்து வந்திக்க நாம் செவி
[னே.

அரும்பதவுரை :

தேவதுவாம்—தெய்வத்தன்மை பொருந்திய. அது பகுதிப்பொருளது.

இன்னிசை வெண்பா.

9. செல்லலை மாற்றுதிருச் சிற்றம் பலகுரவர்
செல்லலை சோலை திகழ்துறைசை மாநகரின்
மெய்யடியார் கூட்டத்தின் மேவினே மாமாயப்
பொய்யடியார் கூட்டவலம் போம்.

அரும்பதவுரை:

செல்லல்—துன்பம், செல்—மேகம். அவலம்—கேடு.

வெண்டாழிசை.

10. போத முதவப் புகழ்துறைசை நன்னகர்வாய்த்
தீதகல வந்ததிருச் சிற்றம் பலகுரவ
னேத மகற்று மெமக்கு.

கட்டறத் துன்பங் களைந்தா வடுதுறையிற்
சிட்டர் பராவுதிருச் சிற்றம் பலகுரவ
னிட்ட முதவு மெமக்கு.

வாச மலர்க்கா வளரா வடுதுறைவாழ்
தேசம் பரவுதிருச் சிற்றம் பலகுரவ
னேசறவு தீர்க்கு மெமக்கு.

அரும்பதவுரை:

ஏதம்—துன்பம் கட்டு—பந்தம். சிட்டர்—நல்லொழுக்கமுடைய பெரியவர். ஏசறவு—கவலை.

வெண்டுறை.

11 குவலயமெங் கும்புகழுங் குளிர்புனற்கா விரித்
[துறைசைக் குருரா யன்சீர்த்
தவவடிவ மாயுதித்த திருச்சிற்றம் பலவனிணைத்
[தாள்கண் டோரே
புரந்தரன் கோவிலும் போதன்மா லுலகமும்
நிரந்தபல் வளங்களு நிதிபதி யாக்கமு
மிரந்துகொண் மென்னினு மெண்ணலா ரண்ணலார்
பரந்தபே ரின்பமாம் பரவையே படிகுவார்
வரந்தரும் பெருமையார் மற்றையோர் கட்குமே.

அரும்பதவுரை :

நிதிபதி—குபேரன். கொண்மென்னினும்—ஏற்றுக் கொள்ளு மென்று வேண்டினாலும். எண்ணலார்—மதிக்க மாட்டார். அண்ணலார்—ஈண்டுக்குருராயர். பரவை—

கடல். மற்றையோரென்றது—இந்திரன், பிரமன், திருமால், குபேரன் முதலியோரையென்க. கதிர்—சூரியன். துன்றுதல்—நெருங்குதல்.

புயவகுப்பு.

12. கனகநற்சபை நிருத்தர்க் கன்பொடு
காலி லென்றுநன் மலர்புனைந்தன
கலைவி ரும்பிய தவத்துப் பண்டிதர்
காத லங்கவி களையணிந்தன
கதிரி ளங்கதிர் பரப்பத் துன்றழ
கான பங்கய மெனவிளங்கின
கரவில் சந்தியி னிசித்திட் டும்பல
கால சைந்நிசை யொடுசிவந்தன
மனமு வந்திரு பதத்திற் கும்பிடு
வார்கை வெண்பொடி மழைபொழிந்தன
மநித ருங்கலை யெழுத்துத் தங்கிதழ்
வாய விழ்ந்திட முறைபயின்றன
வடிவ மைந்தகண் வடத்தைக் கொண்டெழில்
வாய்த ரும்படி யொளிததும்பின
மதிந கந்துகிர் விரற்குப் பண்பென
மாந லந்தரு புகழ்சிறந்தன
முனம டைந்தவர் சிரத்திற் பைம்பொனின்
மோலி யென்றிட நெறிபதிந்தன
மொழித ரும்பெயர் துதித்துச் சென்றவர்
மூழ்கி டும்பெரு மிடி துரந்தன
முதிய செம்பொனி னமைத்துச் சுந்தர
மோதி ரம்பல சுடர்விரிந்தன
முனிவர் வண்சுரர் தமக்கிட் டந்தர
மோது தண்புனன் முறையெறிந்தன

சினக ரம்பெறு சிவத்தைச் சிந்தனை
தேறி யொண்சிர மிசைகு விந்தன
தினமி லிங்கம திருக்கச் சந்திர
சேக ரன்றனை வரமலர்ந்தன
செபவ டம்பல வெடுத்துக் கண்டவர்
சீர மைந்திட வருள்புரிந்தன
தெளிவு ளம்பெறு திருச்சிற் றம்பல
தேசி கன்றன திரள்புயங்களே.

அரும்பதவுரை :

கரவு இல் சந்தியில்—கள்ளமில்லாத சந்தியாகாலத்தில். நிசித்தல்—நியாசஞ்செய்தல். அது தொடுதலென்றவாறு. அங்கநியாசங் கரநியாசம் என நியாசம் இருவகைப்படும். கை—கையில். வெண்பொடி—விபூதி. வெண்பொடி—பண்புத்தொகை. இதழ்—ஏடு, "தோடே மடலே" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானுணர்க. கண்வடம்—அக்கமாலை. துகிர்—பவளம். மோலி—கிரீடம். சிரத்திற் பதிதல்—அஸ்த மஸ்தக சையோகஞ் செய்தல். இடந்தர—பூசை வேதியி லிடங்கொடுக்க. புனல் முறை யெறிதல்—புரோக்ஷித்தல். சினகரம்—கோவில். சந்திரசேகரன்றனை வர மலர்தல்—ஆவாகனஞ்செய்தல். அருள்புரிதல்—சங்கேகொடுத்தல்.

கட்டளைக் கலித்துறை

13. புயலே சுமந்தெழு மின்போலு மங்கையர் பூந்தடங் [கண்
மயலே சுமந்து வருந்துநெஞ் சேவள மார்துறைசை
யியலே பெறுந்திருச் சிற்றம் பலவ ரிணைமலர்த்தா
ளயலே வணங்கின் வருமே குறைவறு மானந்தமே.

அரும்பதவுரை :

இயல்—ஈண்டு ஆசானுக்குரிய இலக்கணம். அயல்—பக்கம்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

14. ஆன்பாலுஞ் செந்தேனு மெனமதுரத்
தமிழ்பாடி யற்பர் தம்பால்
ஏன்பாவி காளலைவீ ரிம்மையினு
மறுமையினு மிடரே யன்றோ
மீன்பாயும் புனற்றுறைசைத் திருச்சிற்றம்
பலகுரவன் மெய்ச்சீர் பாடில்
வான்பாயுஞ் சுரராவின் கன்றதுபோற்
குறைவறுநன் மகிழ்வுண் டாமே.

சுரரா் ஆ—காமதேனு.

தாழிசை.

15. ஆசை வைத்துப் பொன்புவி மாதருக்குத் துன்புற
வாவி விட்டுக் கும்பியி லணுகாமே
நீச வி்த்திப் பண்பினை மோச னித்துத் தன்பத
நீழலைப்பெற் றின்புற வருள்தாராய்
தேச மெச்சச் சென்றர னுவை யட்டுக் கண்டருள்
சேர்து றைக்குட் சந்தத மெதிர்தாழ்வோர்
மாச கற்றிப் பின்சிவ ஞானம் வர்த்திக் கும்படி
வாழ்தி ருச்சிற் றம்பல குருநீயே.

அரும்பதவுரை :

ஆவி—உயிர். கும்பி—ஒரு நரகம். நீசம்—தாழ்வு.

அரன்—மாசிலாமணியீசர். ஆ—பசு. மோசனித்து—நீக்கி. அருள்—உமாதேவி.

ஒருபொருண்மேல் மூன்றடுக்கிய அகவற்றாழிசை

16. (1) நீந்துபுனற் பொய்கை நிறைதுறைசை யூர்க்கதிப
ராய்ந்த வழிவர் திருச் சிற்றம் பலகுரவர்
சேந்த சரணம் பணியாமோ நெஞ்சே.

(2) அன்னக் கொடிகட்டி யார்க்குந் தருந்துறைசை
மன்னு முனிவர்திருச் சிற்றம் பலகுரவர்
பொன்னஞ் சரணம் பணியாமோ நெஞ்சே.

(3) தேவாதி தேவர் திருவா வடுதுறையிற்
கோவாக வந்ததிருச் சிற்றம் பலகுரவர்
பூவார் சரணம் பணியாமோ நெஞ்சே.

அரும்பதவுரை :

சேந்த—சிவந்த. பணியாமோ என்றவற்றிலோகாரங்கள் எதிர்மறை. பணிவாமென்றபடி.

அகவற்றுறை.

17. சேவைக் கினிய திருச் சிற்றம் பலகுரவர்
கோவைத் தமிழ்மாலை கொண்டாரென் பாலுமே
கோவைத் தமிழ்மாலை கொண்டார்சீர்
மேவித் துறைசையின் மெய்யடி யாரையான்.
[மேவவே.

அரும்பதவுரை :

சேவைக்கு—வணங்குதற்கு. கோவைத் தமிழ் மாலையென்றது திருச்சிற்றம்பல தேசிகர் பேரில் இந் நூலாசிரியர் இயற்றிய அகப்பொருட்கோவையை. அது இப்பொழுது கிடைக்கவில்லை,

மூன்றடுக்கிவந்த கலித்தாழிசை.

18. (1) மேதா வியர்புகழு மெய்த்திருச்சிற் றம்பலவர்
பாதார விந்தம் பணிவீ ரழியா நலம்வேண்டின்

(2) திருவா வடுதுறைசை திகழ்திருச்சிற் றம்பலவர்
சரணார விந்தம் பணிவீ ரழியா நலம்வேண்டின்.

(3) ஆட்டா னெனைக்கொண் டமர்திருச்சிற் றம்
[பலவர்
தாட்டா மரைகள் பணிவீ ரழியா நலம்வேண்
[டின்.

அரும்பதவுரை :

மேதாவியர்—அறிஞர். ஆள்—அடிமை. தான்—அசை.

குறிப்பு :—19-ஆம் பாடல் முதல் 24-வரை 6 பாடல்கள் கிடைக்கவில்லை.

விறலியார்.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

25. மலைதாங்கு வெள்ளருவி யொழுக்கம் போல
மாநிலத்தோர் கண்டுமன மதிக்கத் தக்க
விலைதாங்கி லாதமுத்து வடங்கள் பூண்டு
மிளிர்பெரிய தனஞ்சுமந்த விறலி யாரே
யலைதாங்கு காவிரியார் துறைசை யூரி
லருடாங்கு திருச்சிற்றம் பலவர் சைவக்
கலைதாங்கு கல்விநலம் பாடிப் பாடிக்
கருணைதாங் கியவாறும் பாடு வீரே.

அரும்பதவுரை:

விலை தாங்கிலாத—விலை மதித்தற் கரிய.

சித்து.

தாழிசை.

26. பாதம்பணி வோருக்கருள் பரமன்றிருச் சிற்றம்
பலதேசிகன் றுறைசைப்பதி பகர்சித்தர்கள்
[யாமே
சூதந்தனி லேகாய்தரச் சொலிப்பொன்வர வழைப்
[போந்
துரிசற்றவெள் ளியிலேமிகத் துதித்தங்கமுங்
[காண்போ

மேதந்தரு நாகந்தனி லிரும்பைவரப் பார்ப்போ
மெழுவாரண மொருகைதனி லெடுத்தோடந்
[திடுவோம்

மாதந்தனில் வருடம்மிக வருமாறறி வோமே
மண்மேலரம் பையைக்கால்பெற வைத்தேதரு
[வோமே.

அரும்பதவுரை:

சூதம்—இரசம், மாமரம். காய்தர—காய, காய்களைத் தர. சொலி—சொலிக்கின்ற, சொல்லி. பொன்—திரவியம், பொன் போன்ற பழம். துரிசற்ற—குற்றமற்ற, துரிசு என்னும் பொருளின் தன்மை நீங்கிய. வெள்ளியிலே—வெள்ளை நிறமுள்ள வப்பொருளாலே. துதித் தங்கம்—மாந்நிறையப் பொன்னையும். துரிசு அற்ற—குற்றமில்லாத—வெள்ளியிலே—சுக்கிரவாரத்திலே. துதி—தேவரால் துதிக்கப்படுகின்ற. தங்கம்—பொன். இங்கே குரு என்னும் கிரகத்தைக் காண்பேம். நாகம்—துத்தநாகம், பாம்பு. இரும்பை—இரும்பினை, பெரிய படத்தை, எழுவாரணம்—ஏழு யானை, ஏழு கோழி. மாதந்தனில்—மாதங்களால், மாதத்தில். வருடம்—ஆண்டு, மழை. அரம்பை—வாழை, தெய்வப்பெண். மண்மேற்கால் பெற—பூமியில் வேரூன்ற, புவியில் பாதம் பொருந்த வைத்துத் தருவாமென்றவாறு.

"வட்டப் பொட்டு வரிப் பொட்டு வன்னியன் மகளைத் தொட்டிட்டுத், தொட்டாற்றுரிசு வெளுத்திட்டுத் துய்ய சூதங்கட்டிட்டு" என்னுஞ் செய்யுளில் துரிசு என்னும் பொருள் வெண்ணிறமடைதலும் அங்ஙனம் வெண்ணிற மடைந்த துரிசினை இரசத்தில் இட இரதங் கட்டுற்றுப் பொற்கட்டியாதலுமா மெண்க.

கலி.

தாழிசை.

27\. தருவி ருந்தகர தலர்பெ ருந்துறைசை
தனிலி ருந்தசிவ தேசிகர்
தருக்கற் றைந்தைவிடு திருச்சிற் றம்பலவர்
தமக்கிட் டங்குலவு களியர்யா

முருவி ருந்துபுணர் தந்தை யானவனு
மொருவ னேபிரம சாரியா
முற்ற பிள்ளைபல பெற்ற வன்னையுமொ
ருத்தியே யழிவில் கன்னியாங்

கருவி ருந்ததிலை யாம வர்க்குவரு
காய வேற்றுமையு மில்லைபாங்
கண்ட மெய்யுருவை விண்டு கூறுவது
கடின மாமுறையு மின்றியே

தெருவி ருந்துமு னளித்த தாய்பினொரு
சேயு டன்கலவி செய்யுமாஞ்
செய்து பெற்றுதவு பிள்ளை கட்கழிவு
செய்து மோர்பொழுது தின்னுமே.

அரும்பதவுரை:

தருவிருந்த—கொடுத்தலிற் கற்பகத் தன்மை வாய்ந்த. கரதலர்—திருக்கரங்களை யுடையவரும். பெரும்—பெரிய. துறைசைதனில்—திருவாவடுதுறையின் கண். இருந்த—(அநாதி முத்த சித்துருவாகிய சிவமே அநாதி பெத்த சித்துருவாகிய ஆன்மாக்களுய்யும் பொருட்டு) திருவுருக் கொண்டு எழுந்தருளியிருந்த. சிவதேசிகர் — சைவகுரு மூர்த்தி. தருக்கு அற்று—(இயல்பாகவே பிறவிக்குக் காரணமாகிய) செருக்கு நீங்கி. ஐந்தைவிடு—பொறி வாயில் ஐந்தவாவையும் அவித்த. திருச்சிற்றம்பலவர் தமக்கு—திருச்சிற்றம் பலவராகிய பரமாசாரியருக்கு.

இட்டங்குலவு—நட்புப்பொருந்திய. களியர்யாம்—கட்களிப்பை யுடையவராகிய யாம் (எமது வரலாற்றைக் கூறுவோம் கேண்மின்கள்).

உருவிருந்து புணர் தந்தை யானவனும் ஒருவனே—வடிவத்தோடு கூடிப்புணர்கின்ற எங்கள் தகப்பனானவனும் ஒருவனே யாவன். பிரமசாரியாம்—(அவனும்) பிரம சரியத்தினின்றும் சிறிதும் வழுவாதவனும். உற்ற—இவ் வுலகிற் பொருந்திய. பல பிள்ளை—பல பிள்ளைகளாகிய எங்களை. பெற்ற—ஈன்ற. அன்னையும்—தாயும். ஒருத்தியே—ஒருத்தியேயாவள். (அன்னளும்) அழிவில் கன்னியாம்—எக் காலத்திலும் அழிவில்லாத கன்னித் தன்மையினின்றும் சிறிதும் வழுவாதவளாம். அவர்க்கு—அவ் விருவரிடத்தும் கரு—(தந்தையிடத்து இரண்டு மதியும், தாயிடத்துப் பத்துத் திங்களும் தங்குதலாகிய) கருப்பம், இருந்ததில்லையாம்—இருந்ததாக ஒருவருஞ் சொல்லக் கேட்டதில்லையாம். வரு காய வேற்றுமையுமில்லையாம்—இருவினை காரணமாக வருகின்ற உடம்பினிடத்து ஆண் பெண்ணென்ற வேறுபாடு மில்லையாம். மெய் கண்டவுருவை—உண்மையாகப் பார்த்த அவர் வடிவங்களை. விண்டுகூறுவது—வெளிப்படச்சொல்வது. கடினமாம்—அரியதாகும். முன் அளித்த தாய்—முன் எங்களைப் பெற்றதாய். முறையுமின்றி—உலகியல் முறை சிறிதுமில்லாமல். தெருவிருந்து—தெருவின் கணிருந்து. பின்னொரு சேயுடன்—பின்தோன்றிய ஒரு மகனுடன். கலவிசெய்யும்—புணருவாள். செய்து—அங்ஙனங் கலவி செய்து. பெற்றுதவு பிள்ளைகட்கு—பெற்றுத்தந்த மக்களுக்கு. அழிவுசெய்து—கேட்டைச்செய்து. ஒருபொழுதில்—ஒருபொழுதின் கண் தின்னும்—தின்பாள் என்றவாறு.

இனித், திருச்சிற்றம்பல தேசிகருக்கு இட்டங் குலவு அணுக்கத் தொண்டராகப் பொருந்தியதினலுண்

டாகிய சிவாநந்தக்களிப்பையுடைய யாம் எங்கள் சந்,தான பரம்பரை வரலாற்றைக் கூறுகின்றோம். கேளுங்கள்.

உருவிருந்து—திருவுருவத்தோ டிருந்து, புணர்—சத்தியோடு கூடிய, தந்தையாரும்—சிவபெருமானும். ஒருவனே — ஒருவனேயாவன். பிரமசாரியாம் — அவனும் எண்ணிறந்த சராசரங்களைச் சத்தியோடுகூடி யீன்றும் விகார மின்மையால் நைட்டிக பிரமசாரியாவன். உற்ற— இந்த உலகத்திற் பொருந்திய, பலபிள்ளை—எண்ணிறந்த சராசரங்களாகிய பலபிள்ளைகளையும். பெற்ற—ஈன்ற, அன்னையும்—தாயாகிய சத்தியும், ஒருத்தியே—ஒருத்தியேயாவள். (அவளும்) அழிவில்கன்னியாம்—மகா சங்காரகாலத்திலும் அழியாத கன்னித் தன்மையுடையவளாம். அவர்க்கு—அவ்விருவர் மாட்டும். கருவிருந்ததிலையாம்—எண்ணிறந்த சராசரங்களையும் தம் இச்சா மாத்திரத்தில் தோற்றுவித்தலன்றிப்) பன்னிரு மாதக் கருவயினுறத்தோற்றுவித்ததில்லையாம். வருகாய வேற்றுமையுமில்லையாம்—(அவ்விருவர்க்கும் அருள் காரணமாகக் கொள்ளும் திருமேனியன்றி) இருவினை காரணமாக வரும் மக்களுடலிலுள்ள ஆண் பெண் என்ற வேற்றுமை போன்ற வேற்றுமையில்லையாம். முறையுமின்றியே–(சிவத்தினின்றுஞ் சத்திதோன்றவேண்டுமென்ற) வரன்முறையில்லாமலே, தெருவிருந்து—முச்சந்தி வீதியிலிருந்து.

*சிவஞான சித்தியார் 'சிவஞ்சத்தி' என்னுஞ் செய்யுளாலறிக.

முன்னளித்த தாய் — சிவத்தை முன்னர் தோற்றுவித்த தாயாகிய சத்தி. பின்—பின்னர். அளித்த—(சத்தியாகிய தன் மாட்டுத்) தோற்றிய. சேயுடன்—சிவத்துடனே, கலவி — கலத்தலை, செய்யுமாம்—ஐந்

தொழிலியற்றுதலைச்செய்யும். செய்து, அங்ஙனம் ஐந் தொழிலியற்றுதலால் பெற்ற—தோற்றுவித்த. பிள்ளை கட்கு—குழவிகளை, ஓர்பொழுது—ஓர் காலத்துச் சங்கரித்து தின்னும்—தன்னுளடக்கிக்கொள்ளும்.

தன்னடியார்க்கு வேண்டியாங்களித்தலின் தருவி ருந்த கரதலரென்றார். யானெனதென்னுஞ் செருக்கினை யறுத்தாராதலின், தருக்கற்றறைந்து விடு திருச்சிற்றம் பலவரென்றார். களியர் தங்களுக்குள் முறையின்றிக் கூடுவதியல்பாதலின் அங்ஙனமுறையின்றிப் பலர் தந்தை யரிலர், ஒருவனே தந்தையா மென்பார் ஒருவனே தந்தை யாமென்றார். எண்ணிறந்த சராசரங்களை யீன்றும் அம்மை யப்பர்கள் விகாரமின்றி இருத்தலின் ஒருவனே பிரமசாரி என்றும் ஒருத்தியே கன்னி என்றுங் கூறினார்.

இதனை "பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னி யாகும்" என்னுஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தா னுணர்க. களியர் காய வேற்றுமையிலை என்றது. ஆண் மகன் ஆண் மகனே. பெண்மகள் பெண்மகளே வேறு பாடின்றென்பார் காயவேற்றுமையு மில்லையாமென்றார். சத்தியும் சிவமும் மரமும் காழ்ப்பும் போல ஒற்றித்து நிற்றலிற் காயவேற்றுமையுமில்லை யாமென்றார். சுரா பானம் பண்ணலால் என்றும் ஒரு படித்தாலிருத்தலின் களியர் கண்ட மெய்யுருவை இத் தன்மையதென்று கூறு தல் யாவர்க்கும் அரிதாமென்பார் கடினமாமென்றார் களி மயக்கத்தால் முச்சந்தியிலிருந்து முறையின்றிச் சேயோடு கூடுதலின், சேயோடு கலவி செய்யுமாமென் றார். சத்தி தத்துவத்தினின்றுந் தோன்றிய, ஈசுரஞ் சாதாக்கிய முதலிய வற்றோடுங் கூடிச் சத்தி தத்துவந் தொழில் நடாத்தலின் முன்னளித்த தாய் சேயுடன் கலவி செய்யுமென்று கூறினார்.

முச்சந்தி—இடைகலை, பிங்கலை, சுழுமுனை யாதிய மூன்றும் கூடுமிடத்தை முச்சந்தி என்றார்.

களியர் களிமயக்கத்தால் செய்வதும் உறுவதும் அறியாது தானீன்ற குழவியைக் கோறல் செய்து உண்பாள் என்பார், அழிவு செய்து உண்ணுமென்றார்.

சத்தி சத்தனினின்றும் வேறின்றி நின்று அழித்தல் செய்து தன்னுட் கரக்குமென்பார், பிள்ளைகட் கழிவு செய்தும் ஓர் பொழுது தின்னுமென்றார்.

ஊசல்.

ஆசிரிய விருத்தம்.

28. திருநந்தி முதற்பதின்மர் சீரைப் பாடித்
திகழ்துறைசை நமச்சிவா யரையே பாடிக்
கருநந்து மறைஞானர் முதலா வந்த
காரணர்க ளீரைவர் மலர்த்தாள் பாடி
யுருநந்த வுருமாற்ற வெடுத்த நாத
ருயர்திருச்சிற் றம்பலதே சிகனு ரன்பர்க்
கருள்கின்ற வாபாடி யாடி ரூச
லன்னநடைப் பொன்னனையீ ராடி ரூசல்.

அரும்பதவுரை :

திருநந்தி தேவர் முதலாகிய ஆசாரிய பரம்பரை வரலாற்றை இந்நூல் முதற் செய்யுளுரையில் கூறிய திருவிருத்தத்தாலறிக. கரு—பிறவி. நந்தும் உரு—நம்முடலை, மாற்ற — நீக்குவதற்கு. உருவெடுத்த நாதர் — திருவுருவெடுத்த தலைவராகிய ஞானதேசிகர்.

ஊர்.

நேரிசை வெண்பா

29. ஊனமற மேலுலகி லுள்ளவரு மானிடவ
ரான திருவா வடுதுறையே — ஞான
குருமணியென் கண்மணியென் கோதகற்றி யாண்ட
வொருதிருச்சிற் றம்பலவ னூர்.

அரும்பதவுரை :

இது பாட்டுடைத்தலைவர் பதியியல் புரைத்தல். மேலுல கிலுள்ளவரும் ஊனமற மானிடவராதற்குக் காரணமான துறைசையென்க. திருச்சிற்றம் பலவர் உப தேசம் பெற்று வீடடைய விண்ணவர் மண்ணில் வருத லால் இடத்திரிபால் மானிடவராயினரென்க.

மடக்கு

விருத்தம்

30. ஊர்வாய்த் துறைசைக் கரதனமே
உன்னிப் பணிவார்க் கரதனமே
உபதே சப்பஞ் சாக்கரனே
ஊழைக் கனற்பஞ் சாக்கரனே

பார்வாய்ச் சோழ நாட்டானே
பாவ வினையை நாட்டானே
பர்மா மதத்தை மதியானே
பரமே கருது மதியானே

சோர்வா யொன்று மிசையானே
துட்டர் கூட்ட மிசையானே
துணைநீ யென்று லருள்பார்க்குந்
தொல்லை விசும்பி னெடுபார்க்குஞ்

சீர்வாய்த் திருத்தா மரைக்கண்ணே
சித்த நொடித்தா மரைக்கண்ணே
செய்யாய் நினைப்புப் பலவரையே
திருவார் சிற்றம் பலவரையே.

அரும்பதவுரை:

ஊர் வாய் துறைசை—ஊராக வாய்ந்த துறைசை யென்க. ஊர், பேர், உரு இல்லாத இறைவன் துறைசையை ஊராகக் கொண்டமையால் ஊர்வாய் துறைசை யென்றார். விசும்பினொடு—சுவர்க்கத்துக்கும். பார்க்கும்—பூவுலகுக்கும் நீயே துணையென்றால். அருள்பார்க்கும்—திருக் கடைக்கண் சாத்துவான். சித்தம் — மனமே. நொடித்தாம்—நொடித்தலால் உளவாகிய. அரைக்கண் — அரை மாத்திரைப் பொழுதில். சீர்வாய் — சிறப்பு வாய்ந்த. திருத்தாமரை — அழகிய கொன்றை மாலை யணிந்தவரை. கண்—கருதுவாய். திருச்சிற்றம்பலவரை—திருச்சிற்றம்பல தேசிகரை. நினைப்புச் செய்யாய்—நினைவாய். பலவரை—பலபேரை, ஆசிரியரல்லாதாரை. நினைப்புச் செய்யாய் — நினையா திருப்பாயாக. நினைப் பென்ற சொல்லையும் செய்யாயென்ற சொல்லையும் மடக்குக்கியைய ஈரிடத்துங்கொள்க. செய்யாய் என்பது விதி, மறை இரண்டற்கும் பொது.

வெண்பா.

31. பலவரைமே லோடு பசுங்கிளியே வாயாற்
சொலவரையே காண்டெனது சூழ்ச்சி—யுலவுதிருச்
சிற்றம் பலதே சிகர்சிகரப் பூம்புனத்தி
லுற்றம் பலகா லுறவு.

அரும்பதவுரை:

உலவு— (அநாதி பெத்த சித்துருவாகிய யாங்கள் உய்தற் பொருட்டு அநாதிமுத்த சித்துருவே திருவுருக் கொண்டு) உலவுகின்ற. திருச்சிற்றம்பல தேசிகருடைய மலையின்கணுள்ள திணைப்புனத்தில். பலகால் — பல நாளாகத் தலைவனும் யானும். உறவு — கூட்டத்திணை. உற்றம்—உற்றனம் (அங்ஙனமிருக்க நின்னிற்பிரியேன். பிரியினுயிர் வாழேன்) என்று சொல்லிய அவரையே கண்டு — அத்தலைவரைப் பார்த்து. எனது சூழ்ச்சி — (ஆயத்தார்க்கும் தோழிமார்க்கும் களவு வெளிப்படாமல் மறைத்து) என்னுடைய உபாயத்தை. பலவரை மேல்—பலவாகிய மலையின் கண்ணுள்ள இரையினைக் கருதி. ஓடு—ஓடுகின்ற, கிளியே—கிள்ளாய். (உன்செய் வினை முற்றியபின்) வாயாற் சொல்—உன் திருவாயாற் சொல்லென்றவாறு. இரைதேடும் மனக்குறிப்பு உண்மையால் மறத்தல் இயல்பாகலின் மீட்டுநினைந்து உண்மைகூறுமென்பது தோன்ற வாயாற் சொல் என்றாள்.

காலம்.

மடக்கு.

32. உறுகால்சந் தனஞ்செய்மத னம்படைக்குங் காலம்
ஒளியிழையார் நெஞ்சுவித னம்படைக்குங் காலம்
அறுகால்கண் மல்லிகைப்பூ மணந்துதையுங் காலம்
ஆடவரை மடவார்கண் மணந்துதையுங் காலம்
தறுகாது தருவெல்லா முருத்தழைக்குங் காலம்
தங்கோனைக் கோகிலங்க ளுருத்தழைக்குங் காலஞ்

செறுமேவு துறைசைவரு திருச்சிற்றம் பலவர்
தென்னுட்டிற் பொருடேட வன்பர்சென்ற காலம்.

அரும்பதவுரை:

• உறுகால்—மிக்கதென்றற் காற்று. சந்தனம்—தேர். அம்பு—பஞ்சபாணம். அடைத்தல்—தூணியினிறைத்தல். விதனம்—வேதனை. அறுகால்கள்—வண்டுகள். துதைதல் — நெருங்குதல். உதைத்தல் — ஊடற்கணிகழ்வதென்க. தறுகாது —தாமதமில்லாமல். உரு — வடிவு. கோனை—மன்மதனை. உருத்து—ஆரவாரித்து. அன்பர் —ஈண்டுத்தலைவர்.

தழைவிருப்புரைத்தல்.

கலித்துறை.

33. காலிற் சிலம்பு மருங்குலிற் காஞ்சிகொங்
[கைக்குமுத்தம்
வேலிற் சிறந்த விழிக்குமை கூந்தலின் மேன்மலராம்
பாலிற் றிகழ்மொழிக் கேதிருச் சிற்றம்
[பலவர்வெற்பின்
மாலிற் செலுமன்ப தென்ன வடுதுறை
[வண்டழையே.

அரும்பதவுரை:

சிற்றம்பலவர் வெற்பின்கண் அன்ப, பாலிற்றிகழ் மொழிக்கு நீதந்த தழை சிலம்பும் காஞ்சியும் முத்தமும் மையும் மலருமா மென வினை முடிபு செய்க.

தழை ஏற்பித்த தோழிகூற்று.

அகவல்.

34. வண்டுவாய் குமட்ட மதுப்பொழி தாமரைத்
தொண்டஞ் சேர்ந்துறை தோலடிப் பறவை
பொற்கடத் தமுதம் பொதிந்தெழுந் தாங்கு
பற்பல தோன்றும் பாற்கடல் கடுப்பவும்
வானக டுரிஞ்சு மரநிரை யிருலின்
மீனின நீர்நாய் வெரீஇமேற் பாய்தர
விழுமென வோசைகொண் டழிதரு தேனு
மெழுநிக ராடவ ரிணைப்புயத் துழுது
கச்சற நிமிர்ந்து கதிர்வடங் குழுமிப்
பச்செனுந் திருமுகம் பார்த்துள் வேர்த்துத்
தவக்குறும் போட்டித் தனிமத ராச
னிவப்புறு கிரீட நேரென வெழுந்து
காளைய ருளமொடு கண்களை யயமுறு
வாளிடு காந்த வரையெனக் கவர்ந்து
குருதி யொழுகிய குஞ்சர மருப்பென
வருண குங்கும மணிப்பூண் முலையார்
கொந்தளக் காடுங் கூடலில் யமுனையும்
வந்தவா ணியுஞ்சேர் வரநதி பொருவவும்
பாசடை மூடிப் பனித்திரை மறிதர
மாசுறு மயிலை மறுகுறப் பயிறலி
னிருண்மல மூடி யிறப்பொடு பிறப்பின்
மருளுறு கரண வகையொடு சுழலுஞ்
சகல வவத்தை தருமுயிர் மானவும்
அகல்புனல் வாவிசூ ழாவடு துறையின்
மதியமு மரவு மலர்சடை முடியுங்
கதிர்மழு மானுங் கண்ணுதல் விழியுந்
திருமுக மைந்துஞ் சேர வேகரந்
தொருமுக மிருவிழி யோங்கிய விணைக்கை

யக்க வடங்கொண் டருளுருக் கொண்டு
பக்குவர்க் கநுக்ரகம் பண்ணுத னிமித்தந்
திருச்சிற் றம்பல தேசிக நாமந்
தரிச்சூத் தொண்டர் தம்பவ மாற்றி
மானைக் காட்டி மானைப் பிடிக்குங்
கான வேடரிற் கலந்தனன் சிவனே.

அரும்பதவுரை:

அம்—நீரினிடத்துள்ள. தொண்டு — கோழியுள்ளானோடு. வண்டு—வண்டுகள். வாய் குமட்ட—தேனையுண்டுமிழ, மதுப்பொழி—தேனைச் சொரிகின்ற, தாமரை — தாமரை மலரிடத்து சேர்ந்துறைகின்ற, தோலடிப் பறவை—தோலடியையுடைய அன்னப்பறவை.

பொற்கடம் தாமரைப்பூவுக்கும், தோலடிப்பறவை அமுதத்துக்கும் உவமை என்க.

மரநிரை இறால் — மரத்தினிடத்து வரிசையாகக் கட்டிய தேன்கூடு, எழு—தூண். திருமுகம் — பெண்களின் முகம். நிவப்புறு — உயர்ந்த. அயம் இழு — இரும்பை இழுக்கின்ற. வாளிடு காந்தவரை — ஒளி பொருந்திய காந்தமலை. குருதி யொழுகிய குஞ்சர மருப்பு — இரத்தம் தோய்ந்த கொல்யானைக் கொம்பு. அருணம்—சிவப்பு. கொந்தளக் காடு — கூந்தற்கானம். கூடலில்—சேர்தலால். வாணி—சரசுவதி நதி. தேனும் கொந்தளக் காடும் கூடுகின்ற தன்மையால் தடாகங்கள் செந்நிறம் பொருந்திய சரசுவதி நதியும், கருநிறம் பொருந்திய யமுனையும் கூடிய கங்கா நதியை யொக்குமென்க. பாசடை — பசிய இலை. மறிதர — மடங்கியடித்தலால். மாசுறு மயிலை—குற்றம் பொருந்திய மீன்.

மறுகு உற—மயக்க முண்டாக, பயிறல் — சஞ்சரித்த லானது. இருண் மலம்—ஆணவ மலம்.

பிறப்பின் கண்ணே மயக்கத்துக் கேதுவாகிய அகக் கருவி புறக்கருவியாகிய தத்துவங்களுடன் (கொள்ளி வட்டமும், காற்றூடியும் போல) வந்துழல்கின்ற உயிரை யொத்தற் கேதுவாகிய அகன்ற வாவி என்க. கரந்து—மறைத்து. அக்கவடம்—உருத்திராக்க மாலை. பக்குவர்—முத்தி விருப்பமுடையவர். பவம் — பிறப்பு. பாற் கடலையொக்கவும், தேனும் கொந்தளகக்காடுங் கூடலால் யமுனையும் வாணியுஞ் சேர்ந்த கங்கை நதியை யொக்க வும் ஏதுவாயிருக்கின்ற வாவி சூழ்ந்த திருவா வடுதுறை யின்கண் மான் முதலியவற்றைக் கரந்து இருவிழியோடு அக்கவடங் கொண்டு முத்திவிருப்புடையார்க்கு முத்தி கொடுக்கத் திருச்சிற்றம்பலப் பெயர் புனைந்து மானைக் காட்டி மானைப்பிடிக்கும் வேடனைப் போல எம்முடன் வந்து கலந்தனன் என வினை முடிபு செய்க.

வெண்பா.

35. சிவனேயென் மெய்கண்ட தேவனே மோன
தவனேகோ முத்திபுரத் தானே — புவிமேற்
செனித்திருக்கை மாற்றுதிருச் சிற்றம் பலவ
இனித்திருக்கை யாலஞ்ச லென்.

அரும்பதவுரை :

மோனம் — ஞானவரம்பு. செனித்து — பிறந்து. இருக்கை—இருத்தலை. அஞ்சல் என்—அஞ்சற்க என்று சொல்வாய். (எ-று)

கிள்ளை விடுதூது

கட்டளைக் கலித்துறை.

36. என்பா விருக்கும் பசுங்கிளி யேகனி யின்னமுதா
வின்பா லுடன்றரு வேன்றுறை சைக்கிறை
[மெய்த்தவர்க்கு
முன்பா லுறைதிருச் சிற்றம் பலவன் முதுவரைமே
லன்பா லணையு மவன்பாற் பகரென தல்லலையே.

அரும்பதவுரை:

மெய்த்தவர்—தவத்தையுடைய அடியார்கள். முன்பு + ஆல் உறையும் எனவும் பிரிக்கலாம். கல்லால விருட்சம் என்று கொள்ளும்போது தவர் என்பதற்குச் சனகாதி முனிவரையுங் கொள்க. முதுவரை—ஞானமலையுமாம்.

இரங்கல் (மடக்கு)

37. அல்லே முழங்கு முன்னீரே
யமையா விரக முன்னீரே
அப்பா லோடு நாவாயே யவர்க்கு நீயென் னுவாயே
புல்லா நின்ற திருக்கைகளே
புகலு மவர்போந் திருக்கைகளே
பொதிந்த குறுமுள் ளிலைத்தாழாய்
போற்றிற் குறைவே றிலைத்தாழாய்
செல்லா தொழியே னென்பார்க்கே
திருச்சிற் றம்பல வன்பார்க்கே
தென்கோ முத்தி புரம்புரையுஞ்
சீரை யுடையேன் புரம்புரையும்
மல்லார் கழியே நந்தினமே
மையன் மாறு தினந்தினமே
வலர்புன் னுகத் தாவரமே மாலை யுய்யத் தாவரமே.

அரும்பதவுரை :

அல்—இராக்காலத்தில். ஏகாரம் அசை. விரகம்—ஆசைப் பெருக்கினை. உன்னீர் — கருதீர். அப்பால் — அந்தப் பக்கத்திற் செல்லும். நாவாய் — மரக்கலமே. அவர்க்கு — என்னைவிட்டுப் பிரிந்த தலைவர்க்கு. என்னு வாய் — நீ எத்தகைய உறவாவாய். புல்லாநின்ற திருக் கைகளே—(நீர் நிலையிற்) பொருந்திவாழும் திருக்கைமீன் களே. அவர்—தலைவர். போந்து இருக்கைகளைப் புகலும் — (பொருளீட்டல் காரணமாக வேற்று நாட்டில்) சென்று இருக்கும் நிலைமையைச் சொல்லுங்கள். பொதிந்த—பொத்திய. தாழாய்—தாழையே. போற்றில் (தலைவர் பொருளீட்டச் சென்ற காலத்து நின் பிரிவால் தலைவி இறந்து படுவாள் செல்லற்க என்று) துதித் திருப்பின். குறைவேறில்லை — (எளியேனுக்கு) குறை வேறில்லையாகும். தாழாய்—வணங்கினையில்லை. செல்லா தொழியேன் என்பார்க்கு — பரமாசாரியன் பாற் செல் லாது நில்லேன் என்னும் சத்தி நிபாதத் துத்தமர்க்கு. அத்திருச்சிற்றம்பலவன் பார்க்கு—அத்திருச் சிற்றம் பல வனுகிய பரமாசாரியன் நயன தீட்சை செய்தலால். தேனு முத்திபுரம் புரையும் சீருடையேன்—(அருட் சத்தியாகிய ஒப்பிலாள்) பசுத்தன்மை யொழிந்து அருட்சத்தி யாகிய வடிவையெடுத்தலையொக்கும். (பசுத் தன்மை நீங்கி அருளிற் கலக்குஞ் சிறப்புடையனுயினுன்) புரம்—(அசுத்தம், துக்கம், சடம் என்றுவர்த்து விட்ட) உடலை. புரையும் — புலால் நாற்றம் முதலியவற்ருல் ஒக்கும். மல்லார் கழியே—அலைகள் ஒன்றினேடொன்று பின்னுத

ஆற்ற உப்பங்கழியே. நந்து இனம்—சங்கின் கூட்டமே. தினந்தினமே—ஒவ்வொரு நாளும். மையல்—தலைவர்பால் எனக்குள்ள மயக்கம். வளர்புன்னைத் தாவரம்—வளர்ச்சியுறுகின்ற புன்னைமரமே. மாலை — மயக்கத்தினின்றும். உய்ய—யான் பிழைக்க. வரம்தா—வரத்தைக் கொடுப்பாய்.

வெண்பா.

38. தாமரையா ணுமமெவன் சாரீறு போனபண்பென்
னேமமுறு மத்திரத்திற் கென்சொல்ல—லாமே
பொருளமையு மென்பதெவன் போதகுரு பேரென்
பரவுதிருச் சிற்றம் பலம்.

அரும்பதக் குறிப்புரை :

திருச்சிற்றம்பல தேசிகன். திரு + சிறு + அம்பு + அலம் + தேசிகன்.

விருத்தம்.

39. பலமுதவு தேவார மோதுவார் முனைனேதும்
பரிசு சேரும்
நலமுதவு நின்னும மகிமையினை யென்னுவா
னவிலப் போமோ
கலமுதவு பொருள்வாரி நெல்லுதவு துறைசைநகர்க்
கதிபா மெய்ச்சஞ்
சலமுதவு பிறப்பறுத்த திருச்சிற்றம் பலகுருவே
தவத்தர் கோவே.

தேவார மோதுவார் முன்னேதுவது — திருச்சிற்றம்பலம். கலம்—மரக்கலம். பொருள்வாரி — பொருளை அள்ளிக்கொண்டு. சஞ்சலம்—துன்பம்.

சந்த விருத்தம்.

40. தவத்திற்கிங் கொருவனுந் தருக்கிக்குங் கலைஞனும்
பவப்பெத்தந் தவிர்வெனும் பரத்தைத்தந்
தருள்வனும்
உவப்புக்கொண் டமரரு முறச்செப்புந்
துறைசையன்
சிவத்தைக்கண் டிசைதருந் திருச்சிற்றம் பலவனே.

அரும்பதவுரை:

தருக்கிக்கும்—தருக்கஞ்செய்யும். பவம்—பிறப்பு. பெத்தம்—மலத்தோடு கூடி நிற்கும் நிலை. உற — மிக. இசைதல்—அத்துவிதமாகக் கலத்தல்.

தவம்

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

41. வனத்திலே சருகருந்தி வெயிலிலே கனலிலே
மழையி லேகாற்
றினத்திலே உடல்வருந்த வென்னதவம் புரிந்தா லு
மிழிவே நல்ல
தினத்திலே துறைசைவரு திருச்சிற்றம் பலசாமி
செவ்வாய் மிச்சி
லனத்திலே பத்திசித்தி முத்தியுண்டா முண்டவரே
யறவர் தாமே.

அரும்பதவுரை :

அவம்—வீண். மிச்சில்—பரிகலசேடம். புத்தி—போகம். அறவர் — ஈண்டுத் தவத்தினர் மேற்று. காற்று இனம்—கொண்டல், கோடை, தென்றல், வாடை

முதலியனவாம். இவரது பரிகல சேடத்தை உண்டவர் குட்டநோய் நீங்கப்பெற்ற வரலாறு காண்க.

இன்னிசை வெண்பா.

42. அறவா துறைசைக் கரசேயஞ் ஞான
மறவா வெனவழைத்தே யாண்டா யுடலு
மறைபொருளு மாவியுங்கைம் மாறுகக் கொண்டா
யிறைதிருச்சிற் றம்பலவ னே.

அரும்பதவுரை:

அஞ்ஞானம் அறவா என்க.

கட்டளைக்கலிப்பா.

43. ஏக மான பரம்பொரு ளெவ்வுரு
வெந்த வண்ண மெனக்கலை யாய்ந்துணர்
பாக மில்லி வெளிதனைக் கையினாற்
பரிசிக் கின்ற படியலை யாமலே
நாகர் போற்றுந் திருவா வடுதுறை
நமச்சி வாயர்தஞ் சந்ததி மல்கவே
தேக முந்திரு வாக்கும் படைத்தனை
திருச்சிற் றம்பல தேசிக ராயனே.

அரும்பதவுரை:

பரம்பொருள்—சிவம். எவ்வுரு—எவ்வடிவம். எந்த வண்ணம்—எந்நிறம். கலை—ஈண்டு ஆகமநூல். பாக மில்லி—வீடடையும் பக்குவமில்லாதவன். வெளி—ஆகாயம். நாகர்—தேவர்கள். சந்ததி—பரம்பரை. திரு வாக்கு—உபதேசம். மல்க—தழைத்தோங்க.

வேழம் வினுதல்

கட்டளைக் கலித்துறை.

44. தேசிக ராந்திருச் சிற்றம் பலவர் செழுங்கனகத்
தேசிக ராலயஞ் சேரா வடுதுறைத் தெண்புனல்சூழ்
தேசிக ராசல மெய்தே னிவண்வந்த தேவிளங்குந்
தேசிக ராவெனப் பற்றிய வாளி தெரியுமன்றே.

அரும்பதவுரை :

கனகம்—பொன்னுற்செய்த. தே—தெய்வத்தன்மை பொருந்திய. சிகராலயம்—சிகரத்தையுடைய கோவில். தேசி — இடத்தையுடையவளே. கராசலம் — யானே. விளங்கு தேசு இகு அரா எனப்பற்றிய வாளி—உலகெங் கணும் விளங்குகின்ற ஒளியையுடைய சூரியனே வருத்து கின்ற செம்மை நிறத்தையுடைய கேதுவென்னும் பாம் பைப்போல (அவ் யானேயின்மேல்) தைத்த (செம்மை நிறத்தையுடைய) கணையாற்றெரியும் என்க. தேசு பண்பாகு பெயராய்ச் சூரியனே யுணர்த்திற்று. இகுத் தல், தொழிற் பெயர் விகுதி குறைந்து இகுவென நின் றது. அரா, ஈண்டுக் கேது வென்னும் பாம்பு. இது செம்மைநிறம் உடையதென்பதனே, "அதிகமாங்கேது செம்மை சிகிகதிர்ப்பகையுமாகும்" என்னும் நிகண்டா னறிக.

எண்சீரடி யாசிரியவிருத்தம்.

45. தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்த்த வாறே
சீவன்முத்த னுக்கியிருண் மலத்தைப் போக்கி
யுரியமருந் தினிலடங்கும் விடமே போல
வூனுக்கை யுள்ளமட்டு மொடுங்க வைத்தே

பரிவின்மறு பவம்வாரா தாண்டாய் வேதப்
பழம்பொருளே வடிவெடுத்துத் தேனு முத்தி
புரியிலுறை திருச்சிற்றம் பலவா வுன்றாள்
போற்றினேன் றுயரமெல்லாம் மாற்றினேனே.

அரும்பதவுரை:

வேதப் பழம்பொருளே—வேதத்தாற் கூறப்படும் பழம் பொருளே. வடிவெடுத்து— (அடியேங்களுய்யும் பொருட்டுத்) திருவுருவெடுத்து. தேனு முத்தி புரியிலுறை திருச்சிற்றம்பலவா—கோமுத்தி நகரிலெழுந்தருளியிருக்கின்ற திருச்சிற்றம்பல மூர்த்தியே. (தேவரீர் அடியேன் மாட்டு) தெரிவரிய மெய்ஞ்ஞானம் சேர்த்தவாறே—யாவராலும் அறிதற்கரிய உண்மை ஞானத்தையுபதேசித்த வக்கணமே. இருள் மலத்தைப்போக்கி—ஆணவமாகிய இருண் மலத்தைக்கெடுத்து. சீவன் முத்தனுக்கி—சீவனோடு முத்தி யடைந்தவனாகச்செய்து. உரிய மருந்தினில் அடங்கும் விடமேபோல—விடத்தை நீக்குதற்குரிய ஔடதத்தால் தன் சத்தி குன்றியிருக்கும் விடத்தினைப்போல. ஊனுக்கை உள்ளமட்டும் ஒடுங்க வைத்து—ஊனோடுகூடிய இவ்வுடல் பிராரத்த கருமநுகரும் வரையும் வாசனு மலத்தை முனைக்க வொட்டாமற் செய்து. பரிவின் மறுபவம் வாராதாண்டாய்—பயிற்சி வயத்தானுளவாகிய அன்பினல் மறு பிறப்பு வாராது, உடலூழாய்க் கழியும் வண்ணஞ்செய்து ஆண்டவனே. உன் தாள் போற்றினேன் துயரமெல்லாம் மாற்றினேன்-தேவரீர் திருவடியை வணங்கினேன் துன்பங்களையெல்லாங் கெடுத்தேன் என்க.

எழுசீரடி யாசிரிய விருத்தம். (கும்மி)

46. மாற்று மருந்தொன்று கண்டேனே சென்ம
மையற் பிணிதனை யண்டேனே
தோற்றுந் துறைசையில் விண்டேனே திருச்
சிற்றம்பலவனைக் கண்டேனே
போற்ற விழிவழி வந்தானே யென்றன்
புந்தியி லென்றுமி ருந்தானே
யேற்றிடு மின்பப் பெருந்தேனே யினி
யின்னலிற் பட்டுவ ருந்தேனே.

அரும்பதவுரை :

மாற்றும் பிறவிப்பிணியை மாற்றும். விண்டேன்—யானென தென்னுஞ் செருக்கறும்படி முறையிட்டேன். ஏற்றிடும்—யாவரும் தியானிக்கின்ற. இன்பம் பெருந்தேன்—இனிமை மிக்க தேன்போன்றவன். இன்னல்—துன்பம். விருந்தான்—புதுமையான்.

கொச்சகம்.

47. தேனுமுத்தி பெறுபுரவர் திருச்சிற்றம் பலகுரவர்
ஞானசித்தி யுபதேச நலந்தருமெம் பவநாச
மானமிகு மகங்காரம் வழிவிடுமே வெகுதூர
மோகமச்சி வாயமந்த்ர மொளிதருமெம்
மிதயவெந்த்ரம்.

அரும்பதவுரை:

நலந்தரும்—இன்பந்தரும். எம்பவம்நாசம்—எம்முடைய பிறவியை நாசஞ்செய்யும். மானம் இகும் அகங்காரம்-பெருமையை நீக்குகின்ற அகங்காரமானது. வெகு

தாரம் வழிவிடும்—மிகச்சேய்மைக் கண்ணே நீங்கும். அவர் கருணை கூர்ந்து செவியறிவுறுத்த பஞ்சாக்கரம் எங்கள் இதயமாகிய இயந்திரத்தின் கண் இருளைநீக்கி ஒளிவிடுமென்க.

பாம்பு.

சிந்து.

48. எங்களுக்கொரு கட்டிக் கரும்பே நல்ல
விந்திரச் செல்வமு மொருசிறு துரும்பே
சங்கர னடியிணை பாக்ய மெனச் சாற்றினன்
மறைகளின் முடிவினில் வாக்யம்
பொங்கிய துறைசையிற் கீர்த்தி மிகப் பொலிதரு
திருச்சிற்றம்பல குருமூர்த்தி
மங்கல சபைநலந் தரவே சொல் மகிழ்வுடன்
படமெடுத் தாடிக்கொள்ளரவே.

அரும்பதவுரை :

அரவே! திருச்சிற்றம்பல குருமூர்த்தி மறைகளின் முடிவாகிய உபநிடதங்களிற் கூறுகின்ற மகா வாக்கியத்தைச் சிந்தித்து இறைவனடி யடைதல் பாக்கியமெனத் திருவாய் மலர்ந்தருளினன். அவன் எங்களுக்குக் கரும்பின் கட்டிபோல்வான்; ஆதலால், இந்திரபோகம் ஒரு சிறு துரும்புக்கு நிகராம் என விணை முடிபுசெய்க.

கட்டளைக் கலித்துறை.

49. அரகர வென்று மகேச்சுர பூசையி லார்க்குமொலி
சிரகர கம்பிதந் தேவர்க்குஞ்
செய்யுந் திருத்துறைசைப்

பரகர வாதுத வுந்திருச் சிற்றம் பலவவென்றார்
கரகர வென்றறுக் கும்பழ வல்வினைக் கட்டினையே.

அரும்பதவுரை :

மகேச்சுர பூசை—மகேச்சுரர்க்குச்செய்யும் பூசை. மகேச்சுரர்—அடியார்குழாங்கள். தேவரும் சிரகர கம்பிதம் செய்தற்கு ஏதுவாகிய துறைசை என்க. துறைசையின்கண் உள்ள பர என்பது விளி. கட்டு—பந்தம். கரகர—ஒலிக்குறிப்பு. ஒலியால் என விரிக்க.

சந்த விருத்தம்.

50. கட்ட றுத்திடக் காண்மின மரங்காள்
பெட்ட தாங்கருள் பெற்றமுத் திப்பதிச்
சிட்ட னுந்திருச் சிற்றம் பலகுரு
சட்டஞ் செய்யுஞ் சபாபதி பூசையே.

அரும்பதவுரை :

பெற்றமுத்திப்பதி — கோமுத்திப் பதியின் கண். (ஆன்மாக்கள்) பெட்டதாங்கு அருள்—விரும்பியதாகிய பொருளை அப்பொழுதே அருளுகின்ற. திருச்சிற்றம்பல குரவன் சபாபதி பூசை செய்வான் கட்டறுத்திடக் காண்மின் என வினைமுடிபு செய்க. பெட்டதாங்கு அருள் குரு வென்க. சட்டம்—ஒழுங்கு. சட்ட என்னும் அகரவீற்றிடைச் சொல் சட்டமென மரீஇயிற்று. இதனைச் சிவஞான போதம் 9-ஆம் சூத்திரம் 59-வது உதாரண வெண்பா வடியானும் உரையானும் உணர்க.

கொச்சகம்.

51. பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவு மக்கவடம்
பேசுவது மெய்காணப் பெற்றசைவ நன்னூலே
வாசந் திருவா வடுதுறையே யெண்ணேழு.
தேசம் பரவுதிருச் சிற்றம் பலகுருவே.

அரும்பதவுரை :

எண்ணேழு தேசம் பரவு குரு வாசந் திருவாவடுதுறை. அவன் பூசுவது வெண்ணீறு பூண்பது உருத்திராக்கம் திருவாய் மலர்ந்தருளுவது மெய்கண்ட சாத்திரம் என்க. மெய் காணப்பட்ட சைவ நன்னூல். "பொய் கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித மெய்கண்டான் நூல்."

கட்டளைக் கலித்துறை.

52. வேதாளந் தன்னுட னுடும்பி ரான்
கொங்கை வேறொரொப்பி
லாதா ளமர்திரு வாவடு தண்டுறை யானெனக்கு
மாதா ளருடிருச் சிற்றம் பலவன் மடத்தினின்று
பாதாளம் விண்செலுங் கைத்தாள வோசை
பதந்தொறுமே.

அரும்பதவுரை:

வேதாளம்—பேய். கொங்கை வேறொ ரொப்பி லாள்—ஒப்பிலாமுலையாள். பிரானும் ஒப்பிலாமுலையா ளுந் தங்கிய திருவாவடுதுறையானும் திருச்சிற் றம்பல வனுமாகிய குருமூர்த்தியென்க. மடத்தில் பூசாகாலந் தோறும் கைத்தாளத்தி னின்றெழு மோசை பாதலத்தி னும் மீதலத்தினுஞ் செல்லும் என வினைமுடிவு செய்க.

நின்றும் என்பதனைக் கைத்தாளத்தினோடுங் கூட்டுக. பதம்—பூசைக்காலம். வீடுபேற்றையருளலின் மாதா வென்றார்.

சந்த விருத்தம்.

53. பதத்தைக் கண்டவர் பழித்துச் சண்டனை
விதிக்கத் தந்தமை வியப்பத் தங்குவர்
திதிக்கக் கண்டரு திருச்சிற் றம்பல
வெதிக்குத் தொண்டென வினைப்பற் றுய்ந்தரோ.

அரும்பதவுரை:

திதிக்கு—காத்தற் றொழிலையுடைய விண்டுவுக்கு. அக்கண் தரு (முன்னருச்சித்த) கண்ணைக்கொடுத்தெனக. இதனை. "அத்திதியு மாதியுமா மங்கு" என்னும் சிவ ஞான போதம் முதலாவது சூத்திரம் நாலாவது உதாரண வெண்பாவடியானும் அதன் உரையானும் உணர்க. திருமாலுக்குக் கண்ணருளிய திருச்சிற்றம்பல தேசிக ருக்கு அடியானென்று கூறி அவர் திருவடியை யடைந்தவர் (பிறப்பினால்வரும்) இளைப்பு நீங்கி நடுவனைப் பழித்து ஆக்குந் தொழிலுடைய அயன் வியக்கும்படி முத்திவீட் டின் கண் தங்குவாரென முடிவுசெய்க. எதி—முனிவர்.

கட்டளைக் கலித்துறை.

54. உய்வது நல்குவ தும்பசு பாச மொழிப்பதனைச்
செய்வது மாந்திருச் சிற்றம் பலவர் திருத்துறைசைச்
சைவ துலிய ரெதிராச ரள்ளித் தருந்திருநீ
றெய்வது பெற்ற கனைபோற் றொடர்தந் திருமைக்
[குமே.

அரும்பதவுரை:

சைவதுல்லியர்—சிவத்தினை நிகர்த்தவர். திருநீறு எழுவாய். இருமை—இம்மை மறுமை. உய்வதை நல்கு வதும் பசுபாசம் ஒழித்தலைச் செய்வதுமா மென்க.

குறளடி வஞ்சிப்பா.

55. இருமைத்துய ரிடைத்தங்கினர்
திருமெய்த்திருச் சிற்றம்பல
குருவைப்பதங் கொண்டேத்திடில்
நாளும்,
அரியய னுலகினு மனையார்
பெரியதோர் முத்தி பெறுகுவர் விரைந்தே.

அரும்பதவுரை:

இருமைத்துயர்—பிறப்பிறப்புக் காரணமாக வருந் துன்பம். திருமெய்—அழகிய திருவுரு. பதம்—காலம்.

நேரிசை வெண்பா.

56. விரையார் பொழிற்றுறைசை மேனகரிற் செல்ல
விரையார் திருமடத்தின் மேவார்—நரகுறுவர்
தீக்கை மறைத்ததிருச் சிற்றம் பலகுரவர்
தீக்கை நலமறியா தே.

அரும்பதவுரை:

தீகை—கையிலுள்ள நெருப்பு. தீக்கை—(சஞ்சித வினையைப் போக்கச் செய்யுந்) தொழில். நலம்—இன் பத்தை. அறியாது—அறியாமல். துறைசைக்கு விரைந்து செல்லாதவரும், மடாலயத்தைச் சாராதவரும் நரகுறுவர் என்க.

கட்டளைக் கலித்துறை.

57. தேவாரம் பூசை தனிலோது வாரிசை தெய்வநல்யாழ்ப்
பாவாருந் தும்புரு நாரதர் கற்பப் பயிலுமிடம்
ஆவாரு முத்தி புரத்தா ரடியார்க் கருள்புரிதல்
ஓவார் புகழ்த்திருச் சிற்றம் பலவ ருறைமடமே.

அரும்பதவுரை :

கோமுத்தி நகரின்கண் எழுந்தருளியவரும் தம்மை அடுத்த அடியார்க்கருள் செய்தலில் நீங்காதவருமாகிய திருச்சிற்றம்பலவனென்க. அவருறைவிடம் மடமென்க. திருவாராதனைக் காலத்தில் ஓதுவாரோதும் தேவாரப் பண்ணிசையைத் தும்புரு நாரதருங் கற்றுக்கொள்ளத் தங்கு மடமென முடிக்க. ஆ ஆரும் முத்திபுரம்—கோமுத்திபுரம்.

எண்சீரடி யாசிரிய விருத்தம்.

53 உறையிடுதற் காகுமோ மனமே யாழி
யுயர்கரையின் சிறுமணல்கண் முன்னுணம்மைச்
சிறையிடுமுற் பவத்தினுக்கு வீணே யன்றோ
செழுந்துறைசைத் திருச்சிற்றம் பலவர் தாளின்
முறையிடுகும் பிடுகிடைக்கு மோதா னென்று
முன்னுவாய் பின்னமக்கு நமனர் வந்து
திறையிடுவர் கண்டுகொளச் சமயந் தேடித்
தியங்குவார் நம்மானைக் கியங்கு வாரே.

அரும்பதவுரை :

மனமே! கருப்பமாகிய சிறையின்கண் நம்மையிட்ட பிறவியினைக் கணக்கிடுவதற்குக் கடற்கரையின் கண்ணுள்ள சிறுமணல்கள் அமையுமா? அமையுமெனக் கோடல் வீணாதுமன்றோ என்க. துறைசையின் கண்ணுள்ள திருச்சிற்றம்பலவர் தாளில் முறையிடுவாய்.

அவர் திருவருள் கிடையா நிற்கும். பாவியாகிய எனக்கு இத் திருவருள் கிடைத்தது என்ன ஆச்சரியமென்று அவர் பெருங்கருணைத் திறத்தைத் தியானிப்பாய்.

அப்படித் தியானிப்பாயாயின், நமனார் திறையளப்பர். கண்டுகொள்ள அமையம் பார்த்து வருந்துவர். நங் கட்டளையின் வண்ணம் நடப்பரென வினை முடிபுசெய்க. உறை—பேரெண்ணைக்குறிக்கும் ஒரு குறியீடு. இதனை நெற் களங்களில் கண்கூடாகக் காணலாம்.

உற்பவம்—பிறப்பு. முறையிடு கும்பிடு என்பன ஆய் விகுதி புணர்ந்து கெட்ட முற்றுக்கள். கிடைக்கும் செய்யுமென்முற்று. ஆ—வியப்பிடைச்சொல். திறை—கப்பம். ஆணை—ஆக்கினை.

நேரிசை வெண்பா.

59. வாரும் புலவீர் மயலா ணவதிமிரம்
பேரும் புலவீர் பிறவிநோய்—தீருந்
திருத்துறைசை மேவுதிருச் சிற்றம் பலசற்
குருத்தனது பொன்மடத்துக் கு.

அரும்பதவுரை:

புலவீர் மடத்துக்கு வாருங்கள் மயக்கத்தைச் செய்கின்ற ஆணவ இருள் நீங்கும், பிறப்பாகிய நோய் நீங்குமென்க. ஆணவதிமிரம் பண்புத்தொகை. வாரும் முன்னிலை வினைமுற்று. புலவீர் இரண்டும் விளி. இது விற்பூட்டுப் பொருள்கோள்.

ஆனந்தக்களிப்பு

60. ஆனந்த மானந்தம் பாரீர்
குருசாமி கோமுத்தி வாசர்—சபைக்
கூத்தப் பிரானடி யேத்திய நேசர்
தருவாய்மெய்ஞ் ஞானப்பிர காசர்—இந்தத்
தரணி யெங்கும் பணியெதி ராசர்

திருநீறு தானருள் கையர்—திருச்
சிற்றம் பலவர்சை வாகமத் தையர்
கருநாச மேபுரி துய்யர்—பதங்
காணாத வீணர்க ளேமுழுப் பொய்யர். (ஆனந்தம்)

அரும்பதவுரை:

தரு வாய்—(அடியார் வேண்டியக்கு வேண்டியாங் கருளவின்) கற்பகத்தருவின் தன்மைவாய்ந்த. கரு—சென்மம்.

மடக்கு

கட்டளைக்கலிப்பா.

61. பொய்கை வாளை பொருவன பூகமே
பொங்க ரெங்கும் புகும்விரும் பூகமே
வெய்ய வன்கதிர் மாறவ ரம்பையே
மேவு மேதழை மீறவ ரம்பையே
யெய்ய வம்புக ளைச்சிலைக் காமனே
யெடுக்க வோங்குங்கு யிற்சிலைக் காமனே
செய்யன் சேர்துறை சைக்கர சிங்கமே
திருச்சிற் றம்பல தேசிக சிங்கமே.

அரும்பதவுரை:

வாளை—ஒருவகை மீன். பூகம்—கமுகு. ஊகம்—கருங்குரங்கு. வாழைகள் தழை செழித்து அதிகரித்தலால் சூரியன் கதிர் வெப்பத்தின் அளவு நீங்கப்பொருந்துமெனக் கொள்க. வரம்பு—அளவு. மாற என்பது செயவெனெச்சம் காரணப் பொருட்டு. காமன் அம்புகளை எய்ய எடுக்க சோலையின் கண் குயிலோசை மிக அதிகரிக்

கும் எனக்கூட்டுக. குயிற்சிலை—குயிலோசை. கா—சோலை. மன்—மிகுதி. செய்யள்—இலக்குமி. கரசிங்கம்—திருக்கரத்தையுடைய சிங்கம். யானையாளி என்பர்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

62. சிங்காச ஞதிபதி திருத்துறைசை
யூராளி, செகத்தோ ரெல்லா
மங்காம லுபதேசம் புரிதிருச்சிற்
லம்பலவன் வண்மை பாரீர்
சங்காழி மாயவனு மறியாத
திருவடியைத் தந்தான் மற்றை
வெங்கானிற் றுரும்பனைய வெனைக்கொண்டா
னிதுவுமொரு விளையாட் டாமே.

அரும்பதவுரை :

எனையுங் கொண்டான் என்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது.

நேரிசை வெண்பா.

63. ஆமென்று ராதியா மல்லற் பிறவிநமக்
காமென்றார் யாவரையு மல்லவென்றார்—போமென்
றருமறைக்குஞ் சோலை யுவர்துறைசைத் தேவாய்
வருதிருச்சிற் றம்பலவர் வந்து.

அரும்பதவுரை :

திருச்சிற்றம்பலவர் யாம் ஆதிஆம் என்பர். (காதலினாலே) எல்லாவற்றிற்கும் முதற்காரணமாகிய பிரமம் யாமாவோம் என்று சொல்கின்றவர் அல்லல் பிறவி நமக்கு ஆம் என்பர்—(இங்ஙனங் கூறல் பசு ஞான

மாதலால்) துன்பத்தைத் தருகின்ற பிறவியானது நமக்கே உரியதாகும் என்றாராவர். (இங்ஙனங்காதலி ஞல் நான் பிரமமென்று சொல்வார் யாவருக்கும் பிறவி நீங்காதாகலின்) யாவரையும் அல்ல வென்றார்—தமக் கடிமையாகாரென்று கூறினர். போம் என்று உரு மறைக்கும்—செல்கின்ற சூரியனது வடிவை மறைக்கும்.

கட்டளைக் கலித்துறை.

64. வந்தா ரொருமுழு ஞானக் கதிரென மன்னிடவு
வந்தார் திருவா வடுதுறை தன்னிலென் வன்மனத்தே
தந்தார் படமென்னு மாயா விருத்திகள் சாயநலந்
தந்தார் புகழ்திருச் சிற்றம் பலவர் தடையறவே.

அரும்பதவுரை :

திருவாவடுதுறை தன்னில் ஒரு முழுஞானக் கதிரென வந்தார் புகழ் திருச்சிற்றம்பலவர் என் வன்மனத்தே மன்னிட உவந்தார் தந்தார் படமென மாயா விருத்திகள் சாயத் தடையற நலந் தந்தாரென வினை முடிபுசெய்க. முழுஞானக்கதிர்—நிறைந்த் ஒளியையுடைய ஞான சூரியன். மன்னிட—நிலைபெற. உவந்தார்—விரும்பினர். மாயாவிருத்திகள்—மாயா சம்பந்தமான செயல்கள்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

65. தடத்திலே கயல்பாயுந் தேனுமுத்தி
புரவரசர் தமிழ்க்கு முன்னாட்
கடத்திலே வருமுனிவர் புகழ்திருச்சிற்
றம்பலவர் கருணைப் பார்வை

யிடத்திலே வசமாகி வலத்திலே
வந்துபணிந் தென்றும் வாழும்
மடத்திலே யிருந்தவருக் கொருக்காலு
மில்லையில்லை மடங்கண் டூரே.

அரும்பதவுரை :

கடம்—கும்பம். மடம்—அறியாமை. வலத்திலே வருதல்—வலம் வருதல்.

நேரிசைவெண்பா.

66. கண்டுபணி வார்க்குக்கற் கண்டு தவமெல்லா
மண்டு புகழ்த்திருச்சிற் றம்பலவர்—முண்டகத்தாள்
பாச மகற்றும் பரஞ்சோதி மேவுகயி
லாசமது சர்வமான் யம்.

அரும்பதவுரை:

திருச்சிற்றம்பலவர் முண்டகத்தாள் பணிவார்க்குக் கற்கண்டு; அது பாச மகற்றும் பரஞ்சோதி மேவு கயிலாயம், சர்வ மானியம் ஆகுமெனக் கொள்க. சர்வமானியம்—வேறொருவர்க்கின்றித் தாமே யனுபவிக்கும் இறையிலி நிலம். மண்டுதல்—செறிதல்.

தாழிசை.

67. மானேர்விழி யார்மேலழல் வாயோடிய பறவை
மதிபோன்மன மயலாலுழன் மாசற்றிட வடிமை
நானேயெனத் தானாட்கொளு நாதன்னெனைச் சிலையி
னார்வாங்கிய தெனச்செய்தரு ணலமென்னென
[நவில்வேன்

கோனேயொளி யானேயுயர் கோமுத்தி புரத்துக்
கொருவாவளர் தருவாகிய கொடையாய்விழி
[யிடையார்

தேனேதவ வடிவேசெழுந் திருவேயரு ளுருவே
சித்தஞ்சிவ மாக்குந்திருச் சிற்றம்பல குருவே.

அரும்பதவுரை:

அழல் வாயோடிய பறவை—அக்கினியில் விழும் விட்டில். மதி—புத்தி. இதனைச் "செழுகின்ற தீப்புகுவிட்டிலின்" என்னும் திருவாசகத்தா னுணர்க. சிலையினுர் வாங்கல்—கல்லின் நாருரித்தல். விழியிடையார்—என்னிருகண்ணினும் பொருந்தி இருக்கும். சித்தம்—சண்டு ஆன்மா. சிவமாக்குதல் சிவமாந்தன்மைப் பெருவாழ்வளித்தல். இதனைச் "சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்" என்னும் திருவாசகத்தா னுணர்க.

கட்டளைக் கலித்துறை

68. குருவெள்ளி நேர்திருச் சிற்றம்
பலர்பலி கூர்ந்துசெய்ய
மருவெள்ளி னெய்யெனு மன்பினன்
முத்துக்கு மாரன்றந்த
வொருவெள்ளித் தேர்கயி லாச தரிசன
மொத்திருக்குங்
கருவெள்ளி நீக்கு நடராசன்
றன்திருக் கண்ணருளே.

அரும்பதவுரை :

குரு—வியாழன். வெள்ளி—சுக்கிரன். பலிகூர்ந்து செய்ய—நித்திய பூசை அன்புமிக்குச் செய்ய. மருவு எள்ளின் னெய்யெனும் அன்பினன்—பொருந்துகின்ற எள்ளின்

கண் நிறைந்து நிற்கின்ற நெய்போலக் கலந்து நிற்கின்ற அன்பினையுடையான். அத்தேரின் கண் எழுந்தருளிய நடராசர் திருக்கண்ணருள் தெரிசித்தோர் கருவை யிகழ்ந்து நீக்குமென்க.

அறுசீரடியாசிரிய விருத்தம்.


69. அருள்படைக்குங் கண்ணுடையா னைம்படைப்புன்
காமனைவென் றடர்த்து ஞானப்
பொருள்படைக்குந் துறைசைவரு திருச்சிற்றம்
பலகுரவன் பூந்தாள் போற்றி
னிருள்படைக்கு மாணவத்தை யெற்றும்வினைச்
சுற்றையெல்லா மிரிக்கு முள்ளந்
தெருள்படைக்கு மமர்புரியுஞ் சண்டனுமுண்
டகனுநம்மைச் சேவிப் பாரே.

அரும்பதவுரை:

அருள்படைக்கும் கண்களையுடையவனும், ஞானப் பொருள் படைத்தவனும் ஆகிய திருச்சிற்றம்பல குரவன் தாளை வணங்கினுல் அத்தாள்கள் ஆணவத்தை எற்றும், வினைக்கட்டை யறுக்கும், ஆன்மா தெளிவுற்று அருள் வடிவாம். படைக்கும் பிரமனும் போர்செய்யும் இயமனும் வணங்குவர் எனக்கூட்டுக. உள்ளம்—ஆன்மா. சண்டன்—இயமன். முண்டகன்—பிரமன்.

கட்டளைக் கலித்துறை.

70. சேவினைப் பின்பு சிவிகைய
தாக்கித் திருத்துறைசை
மேவி யெழுதிருச் சிற்றம்
பலவர் வியன்மடத்திற்



கூவி யமுது கொளுமென்ப
தால்விண் குடியிருப்பை
யோவி யமரரு மானிட
ராய்வர வுன்னுவரே.

அரும்பதவுரை:

இறைவனே ஆன்மாக்க ளுய்யும் பொருட்டுத் திருச்சிற்றம்பலவராகத் திருவுருக்கொண்டா னென்பார் சேவினைச் சிவிகையதாக்கி என்றார். அமுது—உணவு அமிர்தம்.

நேரிசை வெண்பா.

71. ஏடவிழும் போத ணிருங்கை நமன்கால்கள்
சேடன் முடிகள் சிவப்பாறு—நீடுயிர்க்குத்
தேற்ற முதவுதிருச் சிற்றம் பலகுரவன்
சாற்று முபதேசத் தால்.

அரும்பதவுரை:

திருச்சிற்றம்பல குரவர் உபதேசம் ஆன்மாக்களை முத்தியிற் சேர்த்தலால் படைக்குங் கரமும், சங்கரிக்க நடக்குங் காலும், ஆன்மாக்களைச் சுமக்குந் தலையும் அத் தொழிலின் நீங்கலால் வருந்துத லின்றுமென்க.

மடக்கு

கொச்சகக் கலிப்பா.

72. தாலத்தில் வடுத்தனையே தான்றவிர விடுத்தனையே
காலத்தே மருவுளமே கருவிலே திருவுளமே
சீலத்தா ரொருவரையே திருச்சிற்றம் பலவரையே
கோலத்தாற் சிந்தனையே கொண்டன்பாற்
[கசிந்தனையே.

அரும்பதவுரை :

வடு—குற்றம். உளமே காலத்து மருவு—மனமே காலமிருக்கும்போதே தீக்ஷா குருவினிடத்துப் பொருந்துவாய். கருவிலே திரு வுளம்—கருப்பத்திலேயே செல்வச் சிறப்புடையேம். சீலத்தா ரொருவரை—ஒழுக்கத்தால் ஒப்பற்றவரை. குணத்தால் ஒரு மலை போன்றவரை யெனினுமமையும். " காலமுண்டாகவே காதல் செய்துய்மின் " என்பது திருவாசகம்.

நேரிசை வெண்பா.

73. தனையடைந்தாற் காயந் தனையறுப்பா னென்னை
யுனைமனமே வாய்பேச வொட்டான்—றனியே
தெருள்சோதி யானதிருச் சிற்றம் பலவ
னருளாசா னென்பதெவ்வா றும்.

அரும்பதவுரை :

ஏகனாகித் தெளிந்த சோதி வடிவாகிய திருச்சிற்றம் பல குரவன் (ஆன்மாக்கள்) தன்னை வந்தடைந்தால், காயந்தனையறுப்பான்—அடைந்தவர் காயத்திற் கொள்ளும் யானென்னுஞ் செருக்கைப் போக்குவான். மனமே! உனை சங்கற்பஞ்செய்யும் உன்றொழிலொடு வாக்கு இந்திரியத்தின் றொழிலாகிய வசனித்தலையும் நிகழவிடான். என்ன ஆச்சரியம்! இங்ஙனம் செய்கின்ற இவனை அருளோடு கூடிய பரமாசாரியனென்று கூறுவது எவ்வாறு பொருந்தும் ? தனி—ஏகம். தெருள்—தெளிவு. காயத்தை யானெனக் கொள்ளுஞ் செருக்கினை யறுத்தலை உபசாரமாகக் காயந்தனை அறுத்தென்றார்.

கட்டளைக் கலிப்பா.

74. ஆருஞ் சென்னியி லஞ்சுகொக் தாகிய
வுக்க மாலையு நெற்றியின் மேலொளி
சேரும் வெண்பொடிப் பூச்சுங் கருணையே
செய்யும் பார்வையும் வெண்ணகை யுங்குழை

ஆரும் குண்டல மும்மணி மாலைதா
மூரமுங் கையிற் செபவடங் தாங்கிய
சீருங் கண்டுகண் பேறடைந் தேனின்று
திருச்சிற் றம்பல தேசிக ராயனே.

அரும்பதவுரை:

சென்னியில் ஆரும்—தலையிற் பொருந்தும். அக்க மாலை—உருத்திராக்கத்தாலாகிய அஞ்சுகொத்துத் தாழ் வடம். கண்பேறு—கண்ணினைப்பெற்றதாலாகிய பயன்.

நேரிசைவெண்பா.

75. தேறுசுத்தி வெள்ளியெனச் சேரு மயக்கமற
வாறுசுத்தி யாற்சிவத்தோ டாக்கினான்—கூறுதிருச்
சிற்றம் பலகுரவன் றேடி யெனைப்பிறவி
யிற்றம் பலவென் றிட.

அரும்பதவுரை:

தேறு—சுத்தம். சுத்தி—கிளிஞ்சில். ஆறுசுத்தி—ஆறத்துவாக்களையுஞ் சுத்தஞ்செய்தல். ஆறத்துவாக்களாவன:—மந்திரம், பதம், புவனம், வன்னம், தத்துவம், கலை, என்பனவாம். பிறவியிற்று—பிறவி கெட்டு. அம்பல என்றிட—அம்பலவ என்று யாங்கள் சொல்லா நிற்க. தேறுசுத்தி வெள்ளியென—சுத்தியில் வெள்ளி அத்தியாசமாகத் தோற்றியதுபோல. சேரும் மயக்கம் அற—ஆன்மாக்களாகிய எங்களிடத்துள்ள அத்தியாசமாகத் தோன்றிய மயக்கம் நீங்க. அத்தியாசம்—ஒரு பொருளை மற்றொரு பொருளாக உணர்தல். திருச்சிற்றம்பல குரவன் எமைத் தேடிப்பிறவியிற்று யாங்கள் அம்பல என்றிட மயக்கமற சுத்தியால் சிவத்தோடாக்கினான் என வினை முடிவுசெய்க.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

76. இடரேது மினியில்லைப் புள்ளிருக்கு
வேளூரி லென்றுங் கோது
படராத துறைசைநமச் சிவாயருக்கு
முன்னின்ற பரமர் தம்மை
நடராச ரொடுபூசை திருச்சிற்றம்
பலவர்செயு நாளி லோர்நாள்
விடரேனுந் தவரேனுந் தரிசித்தால்
வினைகளெல்லாம் வீடுந் தானே.

அரும்பதவுரை :

கோது—குற்றம். ஸ்ரீநமசிவாயமூர்த்தி புள்ளிருக்கு வேளூர் ஆலயத்திற் சென்று சித்தாமிர்த தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணியபோது அத் தீர்த்தத்திலிருந்து படிக லிங்கம் கிடைத்தது. அதுவே வைத்தியலிங்கம். அவ் விலிங்கத்தை இவ்வாதீனத்தில் ஸ்ரீ நமசிவாயமூர்த்தி முதலாகவரும் குருமூர்த்திகளெல்லாரும் உடையவராக வைத்துப் பூசித்து வருகின்றார்கள். விடர் — காமுகர். தவர்—தவத்தினர்.

விருத்தம்.

77. வீட்டுநா லருள்புரிந்த துறைசை நாதர்
விளம்புமறம் பொருளின்ப மிவற்றை யாய்ந்த
தேட்டுநூல் சிறப்பல்ல வென்னச் சொன்ன
திருச்சிற்றம் பலகுரவன் றாள்சே ராமல்
காட்டுநூல் பலபார்த்துப் பயனென் கண்டீர்
கருத்திலீர் பருத்திநூல் விலைக்காம் வீணே
ஏட்டுநூல் பிரிப்பதுஞ்சேர்ப் பதுமாய் வாணா
ளிகந்திட்டீர் துன்பமே முகந்திட் டீரே.

அரும்பதவுரை :

கருத்திலீர்—செய்வதுந்தவிர்வதும் இன்னதென அறியும் எண்ணமில்லாத உலகீர். வீட்டினை உணர்தற்கேதுவாகிய ஞானநூலினைத் திருவாய்மலர்ந் தருளிய துறைசை நாதரும், உலகத்தாராற் புகழப் படுகின்ற அறம் பொருளின்பமாகிய இவைகளை ஆராய் தற்குக் காரணமாகிய தெளிந்த நூல்கள் சிறப்புடையன அல்ல எனச் சொன்ன திருச்சிற்றம்பலவருமாகிய பரமாச்சாரியர் திருவடியைச் சாராமல் (இவ்வறம்பொருளின்பங்கள் நிலைபெறுதற்கு) பலகாட்டுநூல்—பல உதாரண நூல்களைப் பார்த்து. என்கண்டீர்—என்ன பயனைக்கண்டீர். பருத்திநூல்—பருத்திநூலாயின். வாழ்நாள்—வாழ்நாளின்கண். வீணே—வீணாக. எட்டுநூல் விரிப்பதும் சேர்ப்பதுமாக இகந்திட்டீர் (ஆதலால்) துன்பத்தை முகந்துகொண்டீராவீரென்க. தெளிவு எனப்பொருள் தரும் தெட்டென்னுஞ்சொல் தேட்டென விகாரமெய்தி நின்றது. தெட்டென்பது இப்பொருளில் வருவதை "மானமாலழகர் பதிகனூற்றெட்டே, மற்றவை யாவு நூற்றெட்டே" என்னும் அழகர் கலம்பகத்தானுணர்க. காட்டு—உதாரணம்.

வஞ்சி விருத்தம்.

78. முருக்கித் திண்பவ மோதியே
கருச்சுற் றம்பல காதிநு
நெருக்கித் தொண்டரை யோகைசேர்
திருச்சிற் றம்பல தேவனே.

அரும்பதவுரை :

ஓகை—உவகை. ஒருக்கி—அடக்கி. தொண்டரை வேற்றுமை மயக்கம். பலகருச்சுற்றம்—பலவாகிய கருப்

பாசயப்பையின் கூட்டம். பவம்—பிறப்பு. முருக்கி—கெடுத்து. காதினன்—ஈண்டு நீக்கினன்.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

79. தேவராய்ப் பிறந்தாலென் மானிடராய்ப்
பிறந்தாலென் செகத்திலேயின்
யாவராய்ப் பிறந்தாலென் னிருவினைக்கீ
டாயெடுத்த தாக்கை யன்றே
தாவரா திகளேனுந் திருச்சிற்றம்
பலகுரவன் றருள்க டண்ட
மேவரா நின்றபா துகையாகி
யவர்முடிமேல் விளங்குந் தானே.

அரும்பதவுரை:

தாவரம்—புல்மரம் முதலியன. பாதுகை—திருவடி நிலை.

கட்டளைக் கலித்துறை.

80. தான மிலாரைத் தருவென்று பாடித் தளர்ந்துமிக
வான மிலாத பயிரென்ன வாடு மடப்புலவீர்
ஊன மிலாத்திருச் சிற்றம் பலவ ருயர்துறைசை
யீன மிலாப்புகழ் பாடிற் கொடுப்ப ரிருமையுமே.

அரும்பதவுரை:

தானம்—மழை. ஊனம்—குறைவு. இருமை—இம்மை மறுமைப் பயனென்க.

வெண்பா.

81. இருவினையுஞ் சித்தல்ல வென்றாய் தொடர்ந்து
வருவதெவ னன்மா மலத்தன்—தெரிதரான்
கற்றும் பயனறியேன் கண்மணிபோ னண்ணுதிருச்
சிற்றம் பலகுருவே செப்பு.

அரும்பதவுரை :

கண்ணின் மணிபோன்று என்பாற் பொருந்திய திருச்சிற்றம்பல தேசிகரே! பல நூல்களைக் கற்றும் அந் நூற் பயனறியாத எளியேனுக்கு இருவினைகளுஞ் சடமென்றீர் ! தேவரீர் திருவாய் மலர்ந்தருளியபடி சடமேயானால் அவ்வினைகள் ஆன்மாக்களை விடாதுபற்றி இத் துன்பத்தை யாக்கிவருவதற்குக் காரணமென்னை? அங்ஙனஞ் சடமே யாயினும் இறைவன் இயக்க அவ்வினைகள் இயங்குமென்பதனை ஆன்மா ஆணவமல சம்பந்தத்தை யுடையவனாதலின் தெரியானென்க.

குருவே! பயனறியேனுக்கு சித்தல்ல வென்றாய் தொடர்ந்து வருவது எவன் செப்பு. ஆன்மா மலத்தான் தெரிதரான் என வினைமுடிபு செய்க.

கட்டளைக்கலித்துறை

82, செப்புவ துன்புகழ் காண்ப துனது திருவுருவ
மொப்புவ துன்னுரைக் குற்றேவல் பொல்லா வுடற் [பிறவி
தப்புவ தாந்திருச் சிற்றம் பலகுரு சாமிமெய்ம்மே
லப்புவ துந்தரும் வெண்ணீ றடியனுக் காவனவே.

அரும்பதவுரை :

உடற் பிறவி தப்புவதாந் திருச்சிற்றம்பல குருசாமி— பிறப்பிலியாகிய திருச்சிற்றம்பல குருவே. ஒப்புவது— யானுடன்பட் டியற்றுவது என்க. குருமூர்த்திகள் வெண்ணீற்றை அடியார்கள் நெற்றியில் பூசுவதும் கையிற் கொடுப்பதும் மரபு.

எண்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

83. ஆக்கைமுதற் கண்டனநீ யல்லை யென்று
மறியாத கழிபரநீ யல்லை யென்றுந்
தூக்கியவ னின்றகலப் பாலே எண்ணிச்
சோகமெனப் பாவிக்கச் சொன்ன தாலே
பாக்கியம்பெற் றேன்கருட தியானத் தாலே
பன்னகநஞ் சொழிவதென விமல மானேன்
காக்குமருட் டிருச்சிற்றம் பலவா பாரிற்
கைம்மாறு மழைக்கெவரே கருது வாரே.

அரும்பதவுரை :

காக்குமருட் டிருச்சிற்றம்பலவா—பிறவியாகிய சாகரத்தில் வீழ்ந்த எங்களைக் கருணைக்கையால் எடுத்துக் காக்குந் திருச்சிற்றம்பல குரவனே. ஆக்கைமுதல் கண்டன நீ அல்லை என்றும்—(சுட்டுணர்வுட்பட்டு) உடம்பு முதலாகக் காணப்பட்டனவாகிய பாசக்கூட்டம் ஆன்மாவாகிய நீ யன்றென்றும்; அறியாத கழிபரம் நீ யல்லை யென்றும்—(சுட்டுணர்வினால்) அறியப்படாத மேம்பட்டு நின்ற அப்பதிப் பொருளும் நீயன்றென்றும் திருவாய் மலர்ந்தருளிப் பாசத்தை நீக்கி. அவன் நின்ற கலப்பாலே—(பதிப்பொருள் வேறாயினும் வியாபக வியாப்பிய பாவத்தால்) கண்ணொளியும் ஞாயிற்றினொளியும் வேற்றுமையின்றி ஒற்றித்து நிற்றல்போல் இறைவன் ஒற்றித்து நின்ற கலப்பினையும். தூக்கி எண்ணி—ஆகம அளவை யானும் அனுபூதி வகையானும் ஆராய்ந்து கருதி. சோகமெனப்பாவிக்கச் சொன்னதால்—(கருடோகம் பாவனைபோல) சிவோகம் பாவனையைச் செய்வாயென்று திருவாய் மலர்ந்தருளியதால். கருடதியானத்தால் பன்னக நஞ்சு ஒழிவதென விமலமானேன்—அக் கருடன் தோன்றி விடத்தை நீக்கித்

தெளியச் செய்யுமா போல இறைவனும் என்பால் அத்துவிதமாய் நின்று மலங்களை நீக்கச் சுத்தனுனேன். பாக்கியம் பெற்றேன்—ஆதலால் இவ்வுலகில் ஒருவரும் பெருத பாக்கியம் பெற்றேன். பாரில்–இப் பூமியின்கண். மழைக்கு—பயன் கருதாது பெய்யும் மேகத்துக்கு. கைம்மாறு— பிரதிப்பிரயோசனத்தை. எவர்—யாவர். கருதுவார்—சிந்திப்பார்கள். ஆகலான் நீ செய்த இப் பெருங் கருணைக்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன். ஆதலால் என்பதுமுதல் இசையெச்சம். இச் செய்யுளின் கருத்தை "கண்டவிவை" என்னும் முதற்குறிப்பையுடைய சிவஞானசித்தித் திருவிருத்தத்தா னுணர்க.

நேரிசைவெண்பா.

84. கருதாதாய் காலங் கழித்தனையே நெஞ்சே
யொருதாதாய் கோமுத்தி யூராய்—பெருகுதவந்
தீராமை யாற்றுதிருச் சிற்றம் பலவவென
வாராமை யாற்றுதிக்க லாம்.

அரும்பதவுரை:

நெஞ்சே—மனமே. கோமுத்தியூராய் — கோமுத்திபுரத்தில் வசிப்பவனே. பெருகு தவம் — நாளுக்குநாள் அதிகரிக்கின்ற தவத்தை. தீராமை ஆற்று—நீங்காமற் செய்கின்ற. திருச்சிற்றம்பலவ என—திருச்சிற்றம்பல தேசிகனே என்று.

கட்டளைக் கலித்துறை.

85. ஆவிக் கலைவில்லை யாக்கை யகத்து ளுருவமதாய்
மேவிக் கலையெனத் தாவு மனம்வல் வினைவிளைக்குங்
காவிக் கலையுடை மாதவர் கோமுத்தி காட்டுநகர்த்
தேவிக் கலைதிருச் சிற்றம் பலவரைச் சேர்ந்துய்ம்
[மினே.

அரும்பதவுரை.

உலகீர் ! யாக்கை யகத்துள் — உடம்பினகத்தே. அருவமதாய்—கண்ணிந்திரியத்திற்கு விடயமாதலின்றி. மேவி — பொருந்தி. கலையென — குரங்கினைப் போல. தாவும்—ஒன்றினைவிட்டு ஒன்றினைப் பற்றுகின்ற. மனம்—மனமானது. வல்—வலிய. வினை—வினைகளை. விளைக்கும்—விளைவியர்நிற்கும். (ஆதலால்) தேவி—உமையம்மை. தேவியாரையும் கலைமானையும். காவிக்கலையுடை மாதவர்—கல்லாடைபுனைந்த பெரிய தவத்தினையுடையவர். திருச்சிற்றம்பலவர்—திருச்சிற்றம்பலவருமாகிய பரமாசாரியரை. தேர்ந்து—இடைவிடாது தியானித்து. உய்மின்—பிழையுங்கள் (இங்ஙனஞ் செய்யின்) ஆவி—உங்களுயிருக்கு—அலைவில்லை—வருத்தமில்லையாம்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

86. மின்னார் தில்லை வாழவரு
வேதத் தலைவர் செங்கமலப்

பொன்னார் கொற்றங் குடியார்தம்
பூசைக் குகந்த சபாபதியைத்

தென்னா வடுதண் டுறையர்திருச்
சிற்றம் பலவ ரருச்சனைப்போ

தென்னா ரமுதே யெனத்தலைகை
யெடுப்பார் பிறவி தடுப்பாரே.

அரும்பதவுரை:

• கொற்றங்குடியார் — முதலில் சிதம்பரத்திலிருந்து பின் அதற்கடுத்தகொற்றவன் குடியிலெழுந்தருளியிருந்த உமாபதி சிவாசாரியார். இவர் பூசைசெய்த நடராசரைத் தான் இவ்வாதீனத்தில் அந்நாள் முதல் இந்நாள் வரை

யும் ஆசாரியர்கள் பூசை செய்து வருகின்றார்கள். நடராச ரன்றிச் சிவகாமியம்மையும் திருச்சிற்றம்பல முடையா ரென்னும் சிவலிங்கப் பெருமானும் அவ்வுமாபதி சிவா சாரியர் பூசைசெய்த மூர்த்திகளே. அவ்விருமூர்த்திகளை யும் கூடவே வைத்துப் பூசைசெய்து வருகின்றமை காண்க.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

87. பாரெலாம் படைத்தாலு மகபதிபங்
கயனெடுமால் பதியி லுள்ள
சீரெலாம் படைத்தாலுந் தினைப்போதிற்
கனவுகண்ட செயலே யன்றோ
வாரலாம் பரபோகந் திருச்சிற்றம்
பலகுருவை யடுத்தான் மாசு
பேரலா மவனடிக்கே குற்றேவல்
கிடைக்கிலின்னும் பிறக்க லாமே.

அரும்பதவுரை :

மகபதி—இந்திரன். ஆரலாம்—உண்ணலாம். மாசு—ஆணவ மலம். மாசுதருவதனை மாசென்றார்; இஃதாகு பெயர்.

நேரிசை வெண்பா.

88. பிறவியிலே யிப்பிறவி பேரின்ப மெய்தத்
துறவியிலே தன்னுருவந் தோற்றி—மறவியறத்
தென்றுறைசை மேவுதிருச் சிற்றம் பலகுரவ
னின்றுதவ வந்த தெவன்.

அரும்பதவுரை:

பிறவியிலே—இருவினைக்கீடாக யானெடுத்த பிறப்புக்களிலே. இப் பிறவி—இம்மானுடப் பிறவியில். பேரின்

பம்—என்றும் ஈறில்லாத வீட்டினை. எய்த—(அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத எளியேன்) அடைய. தன்னுருவம்—தனது திருவுருவத்தை, துறவியிலே தோற்றி—காமனை முனிந்து நெடுஞ்சடை மறைத்துக் கவின்ற கல்லாடை புனைந்த திருவுருவமாகத் தோன்றச்செய்து. மறவியற—(எனக்குளவாகிய) மயக்க நீங்க. தென்றுறைசை மேவு திருச்சிற்றம்பல குரவன்—அழகிய துறைசையின்கண் ணுறைகின்ற திருச்சிற்றம்பல தேசிகன். இன்று—இஞ்ஞான்று. உதவ வந்தது — அநுக்கிரகஞ் செய்ய எழுந்தருளியது. எவன்—யாதுகாரணம். துறவி—துறவு. இதனை மணிமேகலை 'மாதவி துறவிக்கு' என்னு மடியானுணர்க.

கட்டளைக் கலித்துறை

89. எவன்மறை யந்தத்தில் வாக்கிய ஞானத்தி லெய்து [பொருள்
அவனிவ னுந்திருச் சிற்றம் பலவ னருட்டுறைசைத்
தவனிடத் தஞ்செழுத் துண்மைபெற் றேமினித் [தாரணிமேற்
றிவஙிலை மாறிமற் றெங்கெழுந் தாலென்னசெங் [கதிரே.

அரும்பதவுரை:

மறையந்தத்தில்—வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களிலுள்ள. வாக்கிய ஞானத்தில்—மஹாவாக்கிய ஞானத்தினால். எய்து பொருள்—அநுபூதியால் அடையப் பெறுகின்ற பொருள். எவன்—பரம்பொருள் யாவனோ. அவ்வன்—அச்சிவன். இவனும்—இவனே என்று யாவரும் சொல்லத்தக்க திருச்சிற்றம்பலவனும். அருள்துறைசைத் தவனிடத்து—யாவருக்கும் அருளை வழங்குகின்ற துறைசையின் கண்ணுள்ள பெருந்தவத்தை யுடையவனுமாகிய

பரமாசாரியன் பால். அஞ்செழுத்துண்மையைப் பெற்றேம்—அஞ்செழுத்துண்மைப் பொருளைச் செவியறிவுறுக் கப்பெற்றேம். (ஆதலால்) இத்தாரணிமேல்—இப்பூமியினிடத்தில். செங்கதிர்—ஞாயிறு. இனி—இனிமேல். திவஙிலைமாறி—பகனிலைமாறுபட்டு. எங்கெழுந்தாலென்ன—எங்கெழில்என். எமக்கு ஆவது ஒன்றுமில்லை என்க. "இரவி யெண்டிசை மாறிலென்" என்பது கவி ராஜசிங்கன் வாக்கு.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

90. கதியுதவு துறைசைவரு திருச்சிற்றம்
பலகுரவர் கதிரி னேடு

மதியுலவு திருமடத்தின் பந்தியிலுண்
பவர்களந்த வாணன் கையு

முதிரறிவு பெறுஞ்சேடன் திருவாயுஞ்
சிங்கமா முகத்தி னேன்றன்

பொதிவயிறும் புரந்தரனார் திருவிழியும்
வேண்டுமெனப் புகலு வாரே.

அரும்பதவுரை :

வாணன்கை—ஆயிரம். சேடன்வாய்—ஆயிரம். சிங்க முகன் வயிறு—மிகப்பெரிய வயிறு. புரந்தரன்விழி—ஆயிரம். ஆயிரவகை அன்னம். ஆயிரவகைக்கறி ஏனையவும் அன்ன: ஆகலின், அன்ன முதலியவற்றை எடுத்தற்கு ஆயிரம் கையும், உண்டற்கு ஆயிரம் வாயும், அவ்வுணவுகள் சென்றடங்கப் பெருவயிறும், அவற்றின் பாகுபாடு தெரிதற்கு ஆயிரங் கண்களும் வேண்டப்பட்டன.

கட்டளைக்கலிப்பா.

91. வாருஞ் வாருஞ்ச பாபதி பூசையை
மகிழ்ந்து கும்பிட்டுத் தூபமுந் தீபமும்
பாரும் பாருஞ்சை வாகம மாதவர்
பந்தியிற்சென் றிருந்துசம் பாவன்ன
மாரு மாரு மெனவேதன் வாய்திறந்
தழைக்கு மேதிரு வாவடு தண்டுறை
சேரு மாதிருச் சிற்றம் பலகுரு
திரும டத்தினிற் சேகண்டி நாதமே.

அரும்பதவுரை :

ஆர்தல்—உண்ணல். நாதம் அழைக்குமெனக் கூட்டுக. ஏகாரங்கள் அசை.

நேரிசை வெண்பா.

92. நாதமுதற் பூதம்வரை நானல்ல மற்றிவைகாண்
போதம் பசுவாம் பொருளாமேற்—பேதைத்
திறமகல நோக்குதிருச் சிற்றம் பலவ
விறையவனைக் காணாத தென்.

அரும்பதவுரை :

மனமே! நாதமுதல் பூதம்வரை—நாததத்துவமுதல் பூதத்துவம் இறுதியாகவுள்ள (கருவித் தொகுதிகளை) நானல்ல—பசுவாகிய யானல்லவாம். இவைகாண்—இக் கருவித்தொகுதிகளை யான் அன்றெனக் காண்கின்ற. போதம் பசுவாம்—ஞானத்தையுடையது ஆன்மாவாகும். மேல்—இவ்விரண்டிற்கு மேலாய் வியாபகமாயுள்ளது.

பொருளாம்—பதிப்பொருளாம் என்று (திருவாய்மலர்ந் தருளி) பேதைத்திறமகல — பேதைத்தன்மை நீங்க. நோக்கு—நயனதீக்ஷை செய்தருளிய. திருச்சிற்றம்பல இறைவனை—குரு சிரேட்டராகிய திருச்சிற்றம்பல தேசிகரை. காணாதது என்—தரிசியாதது யாது காரணம்?

கருவித் தொகுதியாவன :—ஆன்மதத்துவம் இருபானான்கும், வித்தியா தத்துவம் ஏழும், சிவதத்துவம் ஐந்தும் ஆம் என்க.

கட்டளைக் கலித்துறை.

93. என்னே சிவநிறைந் தெங்குநின்றானென் னிருவிழிக்கு
முன்னே தெரிந்திலன் மாயன்கொல் லோவருண் [முற்றுமுள்ளான்
றன்னே ரிலானென் று சாற்றினை யேதுறை சைப்பதி [வாழ்
பொன்னே புகழ்திருச் சிற்றம் பலகுரு புங்கவனே.

அரும்பதவுரை :

துறைசைப் பதிவாழ் பொன்னே புகழ் திருச்சிற்றம்பல குருபுங்கவனே—துறைசையி லெழுந்தருளியிருக்கின்ற தேவகுருவாகிய வியாழப்புத்தேளும் புகழுகின்ற திருச்சிற்றம்பல குருராயனே. (எளியேனுக்குப் பதி இலக்கணமுணர்த்துங்காலத்து) சிவன் எங்கு நிறைந்துநின்றான் என்னே அருள் முற்றுமுள்ளான் தன்னேரிலான் என்று சாற்றினை—இறைவன் எங்கும் வியாபகமுள்ளவன் என்றும் என்னே பேரருளுடையானென்றும் தனக்கோருவ

மனில்லி என்றும் (அளவையானும் பொருந்துமாற்ரு னும் அநுபூதியானும் நுனித்தறிந்து) திருவாய்மலர்ந் தருளினே. என் இருவிழிக்கு முன்னே தெரிந்திலன்— எனது கண்களுக்கு முன்னர்க் காணப்படாளுகலான் (தேவரீர் கூறிய மூவிலக்கணங்களுள் வைத்து வியாபக இலக்கணமுடையவனும் அல்லன்) மாயன் கொல்லோ— பேரருளுடையாரும் தன்னேரிலாரும் கரந்தொழுகுதல் அவர் சால்புடைமைக்கு ஏற்றதன்ருகலின்) வஞ்சக முடையான் போலும் (ஆகையால் ஏனைய ஈரிலக்கணங் களுஞ் சித்தியாமை) என்னே—என்ன ஆச்சரியம்.

எண்சீரடியாசிரிய விருத்தம்

94. புவியிலே திருமூலர் முதலாஞ் சித்த
புருடரனே கர்வாசம் புரியு மோசை
செவியிலே யறியவளர் துறைசை மேவு
திருச்சிற்றம் பலஞான தேசி காசொற்
கவியிலே யுனைப்புகழப் பெற்றே னுள்ளக்
கறைகழுவித் தீக்கைகுறை முடித்தாய் நல்லு
தவியிலே தாயனையாய் பிறவி நோயைச்
சாடினே னின்றுவிளை யாடி னேனே.

அரும்பதவுரை:

திருமூலர் மூவாயிரம் வருடம் வாசஞ்செய்து திருமந் திரமருளிய கதை பெரிய புராணத்தானறிக. தீக்கைக் குறை—நிருவாண தீக்கை. உள்ளக்கறை—ஆன்மாவைப் பற்றிய ஆணவம். உள்ளம்—ஆன்மா.

நேரிசை வெண்பா.

95. ஆடல் புரிபரமர்க் கன்றி முடி தாழான்
பாடல் புரியென் பணிகொண்டா—னீட
லகற்ற வருதிருச்சிற் றம்பல தேவன்
பகற்குலவு செங்கதிரொப் பான்.

அரும்பதவுரை :

நீடுஅல்—அநாதியாகப்பற்றி வருகிற ஆணவமலமாகிய இருள். அகத்திருளை நீக்கும் சிற்றம்பலதேவன் புறத்திருளை நீக்குஞ் சூரியனை ஒப்பான் என வினையுவமைபற்றியே கூறினமையின் இஃது ஒருபுடை யுவம மென்க.

கட்டளைக் கலித்துறை.

96. பார்கொண்ட சேடன் றலைப்பார நீங்கிடப்
பல்லுயிர்க்குஞ்
சீர்கொண்ட முத்திபஞ் சாக்கர மேயுப
தேசஞ்செய்வாய்
கார்கொண்ட சோலைத் திருவா வடுதுறைக்
கண்ணருளாற்
பேர்கொண்டு வாழ்திருச் சிற்றம் பலவ
பெருந்தகையே.

அரும்பதவுரை:

பக்குவான்மாக்களுக்கெல்லாம் முத்தி பஞ்சாக்கரவுபதேசஞ் செய்து முத்தியளிப்பதனால் அவ்வான்மாக்கள் பூமியின்மேற் பிறப்பதில்லை. ஆகலான் சேடனுக்குச்

சுமக்கும் பாரமு மில்லை யென்க. பேர்—புகழ். அருளால் அருளொடு என்க.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

97\. ஏற்றுநந்தி யாதியிரு பத்தொருவர்
பரம்பரையு மிலங்க முத்தி
தேற்றுசைவ குருவாகி யெதிராச
ஞனதயா சிந்து நீயே
யாற்றுவெள்ளத் தங்கணநீ ரெனவெனையுன்
னடியாருள் ளாக்கிப் புன்மை
மாற்றுதிரு வாவடுதண் டுறைத்திருச்சிற்
றம்பலவா மதிதந் தாயே.

அரும்பதவுரை :

நீரென எனை ஆக்கி புன்மை மாற்று திருச்சிற்றம் பலவா முத்தி தேற்று குருவாகி இராசஞன தயாசிந்து வாகிய, நீயே மதிதந்தாய் என வினைமுடிவு செய்க. நந்திமுதல் இருபத்தொருவர்—முதற்கவி உரையானுணர்க. தயாசிந்து—கருணைக்கடல். மூன்றுமடியில் "ஊரங்கண நீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால், பேரும் பிறிதாகித் தீர்த்த மாம்" என்னும் நாலடியாரின் கருத்துக்குறித்தமை காண்க. புன்மை—அறிவின்மை.

நேரிசை வெண்பா.

98\. தாயே யருட்கடலே தங்கமே மெய்யடியார்
காயே பழுத்த கனிரசமே — நீயே
யிறைதிருச்சிற் றம்பலவா வெல்லா வுலகுந்
திறையளப்ப தாகுமடத் தில்.

அரும்பதவுரை :

திருச்சிற்றம்பலவா எல்லாவுலகும் மடத்தில் திறை யளக்கு மாதலால் அருட்கடலே அடியார் கனியே கனி ரசமே நீயே இறை யென வினைமுடிபு செய்க.

கட்டளைக் கலிப்பா.

99. தில்லை வாழுஞ்ச பாபதி பூசனை
திருச்சிற் றம்பல தேசிகர் செய்திடச்
சொல்லை மாற்றிய சேகண்டி யோசையுந்
துங்க மாகிய சங்க முழக்கமும்
வல்லை யார்க்குங்கைத் தாளமுங் கொத்தஞ்சு
மணியி னோசையுந் தேவாரப் பண்களு
மெல்லை தீரவிவ் வண்டப் பரப்பெலா
மேகியப்புறம் போகி முழங்குமே.

அரும்பதவுரை:

வல்லை—விரைவு. சொல்லை மாற்றுதல்—தன்னொலி மிகுதியால் ஒருவர் சொல்லுஞ் சொல் மற்றொருவர்க்குக் கேளாத வண்ணஞ் செய்தல்.

நேரிசை வெண்பா.

100. முழங்கு மவர்வாயை முகிழ்வித்துச் சேவை
வழங்கு மனவழக்க மாற்றுந்—தழங்குபுனற்
றென்றுறைசை மேவுதிருச் சிற்றம் பலகுரவ
ரென்று மகிழ்கட் டியம்.

அரும்பதவுரை :

கட்டியம் முகிழ்வித்துச்சேவை வழங்கும் மனவழக்க மாற்றுமென வினைமுடிபு செய்க. கட்டியம்—விருது கூறுதல். முழங்குதல்—ஈண்டுத் தோத்திரஞ்செய்தல். முகிழ்வித்தல்—மூடச்செய்தல். மனவழக்கம்—மனத்தின் சஞ்சாரம். சேவை—வழிபாடு. தழங்கல்—முழங்கல்.

கட்டளைக் கலித்துறை.

101. இயல்பாய நின்னடி யார்திருக்
கூட்டத்தி லென்னையுமே
வயல்பாயுந் தண்புனல் புல்லுக்கும்
பாய்ந்தென மல்கவைத்தாய்
தயவோ ருருக்கொண்டு வந்தென
வாவடு தண்டுறைவாழ்
நியமா கமத்திருச் சிற்றம்
பலவசெந் நீர்மையனே.

அரும்பதவுரை:

நீர்மையனே வைத்தாய் என வினைமுடிபு செய்க. மல்கவைத்தாய்—தழைய வைத்தாய். நியமாகமம்—சிவயோகத்தை விதிக்கின்ற ஆகமங்கள். இனி, வேதத்தை யுணர்த்தும் நிகமமென்னுஞ் சொல் நியமமெனத் திரிந்து நின்றதெனினுமாம்.

துறைசைக் கலம்பகம் மூலமும் அரும்பதவுரையும்
முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம்.

குறிப்புரை முதலியன.

(பிற்சேர்வு)

நூல்.

---

1. தரவு:

நீர்மேகம் அனையான் — நீருண்ட மேகம் போன்ற கரிய திருமேனியையுடைய திருமால். கமலம் — திருமாலின் திருவுந்தித் தாமரை. மேகம் அனையான் சீர்மேவு சேவடியும், கமலமனையான் திருமுடியும் காண்பதற்கரிய சிவபெருமான் என்க.

"பரம்பிரம மிவனென்றும் பரசிவன் தானென்றும் பரஞானம் இவனென்றும் பராபரன் தானென்றும் —அரன் தரும்சீர் நிலையெல்லாம் இவனே என்றும் அருட் குருவை வழிபடவே அவன் இவன்தானாயே,—இரங்கிய வாரணம் யாமை மீன் அண்டஞ்சினையை இயல்பினுடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும் — பரிந்திவைதா மாக்குமா போற் சிவமே யாக்கும் பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந்தானே" என்பது சிவஞான சித்தியார். இதற்கு ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் பொழிப்புரை வருமாறு:— "சிவபேதம் அனைத்தும் குருமூர்த்தமே எனத் தேறி ஞானாசாரியனை வழிபடுக; அங்ஙனம் வழிபடப் பெறின், சிவன் இக்குருவை ஆவேசித்து நின்று நாடோறும் செய்யும் பரிசம் முதலிய மூன்றினும் அவ்வுயிரைத் தன் வண்ணமாகச் செய்தருளுவன்." அந்திவண்ணர் — சிவபெருமான். தென்புவி — தென்னாடு. திருக்கயிலாய

பரம்பரைத் திருநந்தி மரபு ஸ்ரீ மெய்கண்ட சந்தானத்து ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக பரமாசாரியர் வழியில் பன்னிரண்டாவது ஆசிரியர் இத் திருச்சிற்றம்பல தேசிகர் என்க.

இக்குருமூர்த்தம் திருவாவடுதுறையிலே ஸ்ரீ மாசிலாமணியீசுரர் கோயிலின் வடபால் காவிரிக்குப் போகும் வழியில் இரண்டாங் குருமூர்த்தமாகிய ஸ்ரீ மறைஞான தேசிகர் கோயிலின் பின், 3-வது ஸ்ரீ அம்பலவாண தேசிகருடைய சமாதியின் வடபுறம் உள்ளது.

தாழிசை :

விருது — வெற்றி. பொறி வண்டு — புள்ளிகளையுடைய வண்டுகள். பண் விரிக்கும்—இசைப்பாட்டைப் பாடுகின்ற. கேயூரம்—வாகுவலயம் என்பது தோள்வளை. அரவப்பணி—பாம்பாகிய ஆபரணம். மாயூரம் — அம்மையார் மயில்வடிவாகப் பூசித்த தலம் : திருமயிலாடுதுறை. மா ஊர் — பெருமைதங்கிய ஊர். காஞ்சி — காஞ்சிபுரம். பிரமதேவரால் பூசிக்கப்பட்டமையின் அப்பெயர் பெற்றது. க—பிரமன். கண் நுதலார் — நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான்; நுதற் கண்ணர் என மாறுக. வைப்பு—சேமநிதி. இத்தலத்தில் உள்ள சுவாமி திருநாமம்:—மாசிலாமணியீசர்; தேவியார் திருநாமம்:—ஒப்பிலா முலையம்மை. பிறவிக் கடல் — பிறவியாகிய கடல். கருச் சுற்றுங் கடல் — கெர்ப்பமாகிய சுழியில் வைத்தழுத்துகின்ற கடல் என்க.

அராகம் :

பகர் பொருள் பதி பசுவொடு தளை — சைவசித்தாந்தத்தில் பேசப்படும் பொருள்கள் மூன்று. அவை பதி பசு பாசம் என்பன. பதி—கடவுள், பசு—ஆன்மா, தளை—பாசம். உயிர்— ஆன்மா.

தாழிசை :

குருமூர்த்திகள் உபதேசித்த உபதேச மொழியின் இனிமையை ஆசிரியர் பலபடியாகப் பாராட்டுகின்றார். இது காறும் பிறப்பிறப்புக்களிற் பட்டுச் சுழல வைத்த வலிய வினையைக் கெடுத்துத் தேவரீர் திருவடித் தாமரைகட்குப் பணிவிடை செய்யும் பேறு கிடைப்பதாயின் அதுவே அடியேனுக்கு முத்திப்பேறு என்கிறார். இதைவிட வேறாக முத்தி யில்லை யென்றபடி. இதனை, "ஞானாக மங்களெல்லாங் கேட்டருளி நந்தீசர், ஆனாத முத்தி யடையாமல் — வானோங்குங், காரார் மிடற்றான் கயிலைமலை காவலனாய்ச், சாரூபம் பெற்றதுவென் றான்" என்னும் சதமணிக்கோவை 19-வது செய்யுளையும், "உபதேசித்த குரு திருமேனியை யனவரதமுந் தெரிசிக்கப் பெறிற் சாயுச்சியமும் வேண்டா" என்னும் அதன் பொழிப்பையும் நோக்கியுணர்க.

அம்போதரங்கம் :

மெய்கண்டகலை — ஸ்ரீ மெய்கண்ட தேவ நாயனார் அருளிச் செய்த சிவஞான போதம். தவன் — தவத்தை யுடையவன். மேதை — அறிவு, ஈண்டுச் சிவஞானம். ஈர்தல் — அறுத்தல்.

2.

ஆரணம் — வேதம். ஆகமத் தொகை — இருபத்தெட்டு ஆகமங்களும், உபாகமங்களும் பிறவும். ஊழி — ஊழிக்காலம். திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகள் அநுக்கிரகம் செய்த ஒப்பற்ற உபதேச மொழியே அமையும் என்றபடி.

3.

மனமே! துறைசை நகர்க்குத் தலைவனாகிய திருச்சிற்றம்பல தேசிகருடைய திருவடி நீழலை அணைவாயாக. ஆனந்தமாகிய தேன் தானேமிகும். ஆமாறு — செய்யத்தக்க செயலை. குயில்கள் இனிய பாடல்களைப்பாடி

நெருங்கும் தேமா மரங்களில் நிறைந்த கனிகள் தொங்கு கின்ற செழிப்பாகிய துறைசை. மாந்தளிர்களைக் குயில்கள் அலகாற் கோதி இசைப்பாட்டுக்களை நன்குபாடும். அதனாலேயே 'மாங்குயில்' எனச் சிறப்பிக்கப்படும். "குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறை" என்பது ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் திருவாக்கு. தூங்கும்—தொங்கும்.

4.

தங்கினேன் — தங்கினவனாகிய எனக்கு இருளைக் கிழித்தான் என்க.

5.

ஆசாரியன் திருவடித் தாமரைகளை வணங்குவோம் என ஒருதரம் நினைத்தாலும் நல்வினை வந்து பொருந்தும். இது சிவ நல்வினை. கற்பக தருவை யொப்ப வேண்டு வார்க்கு வேண்டியாங் குதவும் அவன் திருமடத்தைச் சாரின் தவமெல்லாம் எளிதிற் கைகூடும். திருச்சிற்றம் பலம் என அவன் திருப்பெயரை ஒரு தடவை சொன்னால் அதுவே பல நூறாயிரம் ஸ்ரீ பஞ்சாக்கர செபஞ் செய்த பயனாம். ஆசாரியன் திருமேனி தரிசனமே சிவபாவனை யாம். அவனை வணங்கினால் அப்பொழுதே சிவஞானம் கூடும். மெய்ம்மையான அன்புடன் அவனிட்ட கட்டளை யைச் செய்யும் மெய்யடியார்களுக்கு அபர முத்தி பர முத்திப்பயன் சிறப்புறக் கிட்டும் என்றபடி. எனவே, திருச்சிற்றம்பல தேசிக மூர்த்திகள் பேரருளோடு பொருந்தியவர் என்பது காண்க.

6.

யான், எனது என்பன அகப்பற்று புறப்பற்றுக்கள் இவ் அகப்பற்று புறப்பற்றுக்க ளற்றாரே பிறப்பற்றார்: அல்லாதார் பிறப்பிறப்புக்களிற் பட்டுச் சுழல்வர். இதனை,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்."

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்."

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்" என்னும் திருக்குறள்களானும், பரிமேலழகர் செய்த உரைகளானும் அறிக. இனி, உடல் பொருள் ஆவி மூன்றையும் ஆசாரியருக்குத் தத்தம் செய்தலை "அன்றே யென்றனுவியு முடலு முடைமையெல் லாமுங் — குன்றே யனையாய் என்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ" என்னும் திருவாசகப் பகுதியால் அறியலாம். பார்—பூமி. வான்—மேகம். கைம்மாறு—பிரதியுபகாரம்.

7.

அம்பலத் தாண்டவன்—பொன்னம்பலத்திலே அனவரத தாண்டவம் செய்தருளும் கூத்தப்பிரான். அடியார்கள் அருச்சனை செய்தற்குரிய மூர்த்தியாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டவன் என்க. தேறும் — தெளிந்த. நாவன் — நாவினையுடையவன். தேசிகன் ஆவன் என வினை முடிபு செய்க.

8.

திருச்சிற்றம்பலபரமாசாரியாரைத் திருவாவடுதுறையிலே அவர் எழுந்தருளியிருக்கின்ற திருமடத்திற் சென்று நாவால் வாழ்த்த, தலை தாழ்த்து வந்திக்க, நாம் சென்றால் மனமே! முத்தி ஆவது; பாசம் அழிவது. அருள் அறத்தின் தே—கருணையோடு கூடிய தரும தேவதை.

9.

துறைசைமா நகரிலுள்ள உண்மையடியார் கூட்டத்தை யடைந்தோம். இனி, பொய் யடியாருடைய கூட்டத்தினலுண்டாகும் கேடுகள் தொலையும் என்றபடி.

10.

போதம் — சிவஞானம். கா — சோலை. தேசம்—உலகம்.

11.

குவலயம்—பூமி. புரந்தரன்—இந்திரன். போதன்—பிரமதேவர். மற்றையோர்கட்கும் வரந்தரும் பெருமையார் என்க. இணைத்தாள் கண்டோர் எண்ணலார், படிகுவார், பெருமையார் எனக்கூட்டுக.

12.

கனகம் — பொன். தவத்து — தவத்தினையுடைய. காதல்—அன்பு. துன்று—நெருங்கிய. மதி தருங் கலை—மதிக்கத்தக்க சாஸ்திரங்கள்: மதியைத் தருங்கலைகள். முறை—திருமுறைகள்: தேவார திருவாசகங்கள். எழில் வாய் தரும்படி—அழகு பொருந்துமாறு. முனம் அடைந்தவர்—சந்நிதியிற் சென்று சரணகப் புக்க அடியார்கள். மிடி—வறுமை.

15.

அரன் ஆவை அட்டு கண்டு அருள் சேர் துறை—ஆவடுதுறை. சிவபிரான் வந்த உமாதேவியாருடைய பசு வடிவத்தை மாற்றி யணைத்தெழுந்தாராகலின் அப்பெயர் பெற்றது. சந்ததம்—எப்பொழுதும்.

16.

ஆதீன முதற்குரவராகிய ஸ்ரீ பஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் குருபூசை விழாவில் அன்னக்கொடி கட்டிப் பத்து நாட்களிலும் அன்னம் வழங்கும் பெருஞ்சிறப்புக் கூறுதல் காண்க.

32.

இழையார் — ஆபரணங்களை யணிந்த பெண்கள். விதனம்—துன்பம். கோகிலம்—குயில்.

33.

மருங்குல் — இடை. காஞ்சி — எழு கோவை மணி வடம். இரு கோவை வடம் எனவும் கூறுவர். மால்— மயக்கம், திருமால் எனலும் ஆம்.

59.

மயல்—மயக்கம். திமிரம்—இருள்.

60.

தாரணி—பூமி, தூய்யர்—பரிசுத்தர்.

61.

பொங்கர்—சோலை.

62.

மங்காமல்—பிறப்பிறப்பிற்பட்டுக் கெடாமல். வண்மை—வள்ளற்றன்மை. ஆழி—சக்கரப்படை. மாயவன்—கரியோனாகிய திருமால்.

65.

கடத்திலே வருமுனிவர்—குடமுனிவராகிய அகத்தியர். இடத்திலே வலத்திலே என்பன முரண்தொடை.

66.

முண்டகத்தாள்—தாமரை மலர் போன்ற திருவடி.

68.

திருச்சிற்றம்பல தேசிகர் காலத்து ஆன்மார்த்த பூசையைச் சிறப்புறச் செய்தருளுமாறு நீங்காத அன்புடைய முத்துக்குமாரன் என்பார் செய்வித்துக்கொடுத்த வெள்ளித் தேர் கயிலாயக் காட்சியை யொத்தது என்க. எள்ளி—இகழ்ந்து.

70.

திருவாவடுதுறை மடத்திலே அழைத்து யாவருக்கும் அமுது அருத்துவதால் தேவரும் மக்களுடம்புடன் இங்கே வர எண்ணுவர் என்றபடி.

74.

ஆசாரியர் திருமேனி தரிசனப் பேறு இத்தகைத்து எனச் சொல்லப்படுகிறது.

76.

ஆன்மார்த்த பூசனைத் தரிசன விசேடம் காமுகராயினும், தவத்தை யுடையராயினும், அவருடைய வினைக ளெல்லாம் கெட்டொழியப் பண்ணும் என்றபடி.

89.

"எங்கெழின் ஞாயிறு எமக் கேலோ ரெம்பாவாய்" என்னுந் திருவாசகப் பகுதியை நினைப்பிக்கின்றது இச் செய்யுள்.

90.

இப்பாடல் பந்தியி லுண்ணும் உணவு நிலையினை உணர்த்துகின்றது. மாகேசுர பூசைச் சிறப்புக் கூறிய படி.

91.

சேகண்டிநாதச் சிறப்புக்கூறுவது இப் பாடல்.

92.

இத் திருமடத்திலே இரவில் சயனஞ் செய்திருக்கும் மெய்யடியார்களுடைய செவியிற் படும்படி பூசை செய்யும் ஓசையும் சித்தர்கள் ஓசையும் கேட்கும் இயல்பு கூறியபடி.

99.

நாடோறும் பூசைக்காலத்திலே நிகழும் சேகண்டி ஓசை, சங்கமுழக்கம், கைத்தாள வொலி, ஐந்து கொத்து மணியின் ஒலி, தேவாரப் பண் பாடும் இசை முதலியவற்றின் மேம்பாட்டை யுணர்த்தியவாறு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம்.

செய்யுள் முதற்குறிப்பகராதி.

திருச்சிற்றம்பலம்

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

திருச்சிற்றம்பலம்

—ஆளுடைய பிள்ளையார்.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.



உ

சிவமயம்.

திருக்கைலாய பரம்பரைத்

திருவாவடுதுறை யாதீனத்து

ஞானதேசிகர்கள்.

1. ஸ்ரீ நமச்சிவாய தேசிகர்.
2. ,, மறைஞான தேசிகர்.
3. ,, அம்பலவாண தேசிகர்.
4. ,, உருத்திரகோடி தேசிகர்.
5. ,, வேலப்ப தேசிகர்.
6. ,, குமாரசுவாமி தேசிகர்.
7. ,, பிற்குமாரசுவாமி தேசிகர்.
8. ,, மாசிலாமணி தேசிகர்.
9. ,, இராமலிங்க தேசிகர்.
10. ,, வேலப்ப தேசிகர்.
11. ,, பின் வேலப்ப தேசிகர்.
12. ,, திருச்சிற்றம்பல தேசிகர்.
13. ,, அம்பலவாண தேசிகர்.
14. ,, சுப்பிரமணிய தேசிகர்.
15. ,, அம்பலவாண தேசிகர்.
16. ,, சுப்பிரமண்ய தேசிகர்.
17. ,, அம்பலவாண தேசிகர்.
18. ,, சுப்பிரமணிய தேசிகர்.
19. ,, வைத்தியலிங்க தேசிகர்.
20. ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்.

உ
சிவமயம்

ஆதீன வெளியீடுகள்.

1. முத்தி பஞ்சாக்கர மாலை,
பஞ்சாக்கர தேசிகர் மாலை. (பதவுரையுடன்)
2. ஞான பூஜா விதி. (பழையவுரையுடன்)
3. நல்லூர் மாசி மகோற்சவ வைபவம்.
4. மண்ணிப்படிக்கரை ஸ்தல மகாத்மியம்.
5. காருண்யாமிர்த தீர்த்த மகிமை.
6. இராமாயண தாற்பரிய சங்கிரகம். (உரையுடன்)
7. ஸ்ரீமாதவச் சிவஞான சுவாமிகள் மீது
தோத்திரப்பா. (உரையுடன்) I.
8. சிவஞான போதம். (சூத்திரமூலமும்–உரையும்)
9. சித்தாந்த மரபு, சித்தாந்த மரபு கண்டனம்,
சித்தாந்த மரபு கண்டன கண்டனம்:
(குறிப்புரையுடன்)
10. ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தி மும்மணிக் கோவை.
11. திருநெல்வேலித் தேவாரப் பதிகம். (உரையுடன்)
12. ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் மீது
தோத்திரப்பா. (உரையுடன்) II.
13. சைவ சமயம்.
14. பஞ்சாக்கர தேசிகர் அந்தாதி. (உரையுடன்)
15. சித்தாந்தப் பிரகாசிகை. (குறிப்புடன்)
16. சுதந்திரத் திருநாள்.
17. கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது.
(உரையுடன்) டாக்டர். ஸ்ரீ உ. வே. சா.

18. திருச்செந்தூர் — கடற்கரை முருகன் கோயில். (ஆங்கிலம்)

19. ஞான சூடாமணி.

20. சிவஞான போதச் சிற்றுரை. (அச்சில்)
ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள்.

21. சுவாமிநாத தேசிகர் பிரபந்தத் திரட்டு. (அச்சில்)

22. பூப்பிள்ளை அட்டவணை, ஸ்ரீ பஞ்சாக்கர சிந்தனை, ஞானபூசா விதி. (வசனம்)

23. சதமணிக் கோவை—பழைய பொழிப்புரையுடன்.

24. திருவள்ளுவ நாயனாரும், பெரிய புராணமும். (ஆராய்ச்சி)


25. சமயம். (ஸ்ரீ சபாபதி நாவலர்)

26. திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம். (குறிப்புரையுடன்)

27. அத்துவித வாக்கியத் தெளிவுரை.

28. திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ். (அச்சில்) (குறிப்புரையுடன்)

குறிப்பு :- ஆதீன வெளியீடுகள் அனுப்பப் பெற்றுக்கொண்ட அன்பர்கள் உடனே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கட்குப் புத்தகங்கள் வந்த விவரத்தை யறிவிக்க வேண்டுமெனக் கோரப்படுகிறார்கள். புலவர் பெருமக்கள் நூல்களையாராய்ந்து அவர்கள் உயரிய கருத்தையும் அறிவிக்கப் பெரிதும் வேண்டப்பெறுகிறார்கள்.



உ

சிவமயம்.

விரைவில் வெளிவரச் சித்தமாயிருப்பன.

1. திருவாவடுதுறை யமகவந்தாதி. (பதவுரையுடன்)
2. தணிகைப் புராணவுரை.
3. திருவாவடுதுறைப் புராணம்.
4. திருவீழிமிழலைப் புராணம்.
5. சிவஞான போத சிந்தனை.
6. மதுரகவி—தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் பிரபந்தங்கள். (உரையுடன்)
7. சிவஞான போத திராவிட மாபாடியம்.
8. இலக்கணக் கொத்து.
9. தொல்காப்பியப்பாயிரவிருத்தி முதற் சூத்திர விருத்திகள்.
10. இலக்கண விளக்கச் சூருவளி.
11. ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் பிரபந்தங்கள். (குறிப்புரையுடன்)
12. கவிராக்ஷஸ—ஸ்ரீ கச்சியப்ப முனிவரர் பிரபந்தங்கள். (குறிப்புரையுடன்)

AB

7. 49